




ஸ்ரீ பெருந்தேவி தாயார் ஸமேத ஸ்ரீ தேவப்பெருமாள், காஞ்சீபுரம்

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம்

# திருவாய்மொழியே நமது ஸித்தாந்தம்



*மதுரகவிகள, நம்மாழ்வார், நாதமுனிகள்*

*பிரசுரித்தவர் - திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீனிவாச வரதன் , நியூடில்லி*

***E-Mail - yesvee@satyam.net.in*** ***Telephone -011-29231648***




ஸ்ரீமதே ராமானுஜாய நம : நித்யஸ்ரீ : நித்யமங்களம்

# ஸ்ரீரங்க நாராயண ஜீயர் ஸ்வாமி

**50வது பட்டம்,**

**ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமி மடம்**

128, வடக்கு உத்திர வீதி, ஸ்ரீரங்கம் – 620 006.

# SRIRANGA NARAYANA JIYAR SWAMI

Sriranga Narayana Jiyar Swami Matam

*128, North Uthra Street, Srirangam - 620 006.*

ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகராயும் ஸ்ரீஸம்யமி ஸார்வபௌமராயும், சாஸநாதிகத ஸ்ரீரங்கநாத ஸகலவித கைங்கர்ய நிர்வாஹகராயும், ஸ்ரீரங்கம் ஸ்தலத்தார்களின் முதல்வராயும் எழுந்தருளியிருக்கும்

**ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி**
**ஸ்ரீ ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமி**

போன் : 2432810

12/06/2009

ஸ்ரீமான் திருமலை நாச்சம்பாடி ஸ்ரீநிவாஸ வரதன் அவர்களுக்கு அநேக ஆசீர்வாதம். தங்கள் கடிதமும் அத்துடன் இணைக்கப்பட்ட குறிப்பேடும் கிடைக்கப்பெற்றோம். குறிப்பேடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதற்பகுதி வைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பற்றியும், இரண்டாவது பகுதி திருவாய்மொழியே நமது ஸித்தாந்தம் என்ற தலைப்பிலும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. குறிப்பேட்டினை படிக்கும் பொழுது தங்களுக்கு நமது ஸித்தாந்தத்தின் உள்ள ஈடுபாடும் ஆர்வமும் நன்கு புலப்படுகிறது. தாங்கள் எடுத்துக் கொண்டுள்ள இந்த சிறந்த முயற்சி எளிமையான நடையில் அமைந்துள்ளதால் நமது இளைய தலைமுறையினருக்கு பெரு நல்ல வழிகாட்டியாக அமையும்.

தாங்கள் எடுத்துக்கொண்டுள்ள முயற்சி மேன்மேலும் வளர்ந்து நமது வைஷ்ணவ ஸித்தாந்தம் தழைத்தோங்க எல்லாம் வல்ல பெரிய பெருமாளும், பெரிய பிராட்டியும் தங்களுக்கு அருள்புரிய பிரார்த்திக்கிறேன்.

அநேக மங்களாசாஸனங்கள்,

ஸ்ரீ ரங்கநாராயண ஜீயர்



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:




**ஸ்ரீமத் பரமஹம்ஸ அப்பன் பரகால ராமாநுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமி**

**தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் : ஸ்ரீ எம்பார் ஜீயர் மடம்**

30, மணவாளமாமுனி கோயில் வீதி, ஸ்ரீபெரும்பூதூர் - 602 105. காஞ்சிபுரம் மாவட்டம்.

தொலைபேசி : 27162073 செல் : 9994323397


தேதி : 16/5/09

## அணிந்துரை

உண்மையான ஆர்வத்தோடு ஸ்ரீவைஷ்ணவத்தை உள்ளபடி அறிய விரும்பும் ஆர்வலர்களுக்கு உரிய கையேடு இந்நூல்.

பகவானைப் போல, வேதங்களைப் போன்று, ஸ்ரீவைஷ்ணவமும் அனாதியானது.

இந்நூலின் முதல் பகுதியில் குருபரம்பரையின் வழியில் நின்று நமது சித்தாந்தம் தத்துவத்ரயம் (முப்பெரும் தத்துவம்) என்பதை விளக்குகிறார் - விசிஷ்டாத்வைதம் இதனால் புரிகிறது தக்க மேற்கோள்கள் கூறியுள்ளார் ஆசிரியர்.

சித் - அசித் - ஈச்வர தத்வங்கள் விளங்குகின்றன.

அடுத்து, உபநிஷத் வாக்கியங்கள் கொண்டு ஸ்ரீமந்நாராயணனே தெய்வம் என்பதை விளக்குகிறார்.

வடமொழி மேற்கோள்கள் தேவநாகரியிலும் தமிழ் எழுத்துக்களிலும் தரப்படுகின்றன.

ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளே மேன்மைக் கொண்டு அவனை எளிதில் அடைவதற்கான வழியாக அறிவிக்கப்படுகிறது.

இறைவனுக்கும் நமக்கும் உள்ள சரீர - ஆத்ம உறவின் முக்கியத்துவம் கூறப்பெறுகிறது.

பின்னர் 'மோக்ஷ இச்சை' உள்ளவர்கள் அறிய வேண்டிய மூன்று ரகசியங்கள் விளம்பப்படுகின்றன. அவற்றுக்கான மந்திர விவரணங்கள் அமைப்பெறுகின்றன.

P.T.O.

இவ்வாறு நூற் பதிகத்தை அமைத்து,
இரண்டாம் பகுதியில் ஆழ்வார் பாடின திருவாய்மொழியே
வேத ஸித்தாந்தம் என்று திடமாக எடுத்துக்காட்டு-
கிறார் இந்நூலாசிரியர். இது குறிப்பிட்டுப் பாராட்டத்
தக்கது.

தத்துவ, ஹித, புருஷார்த்த ஞானத்தோடு ஸ்ரீமந்
பகவத் ஞானத்தின் மேம்பாட்டை ஒரு பகுதியாக
ஆராய்ந்து. பெரியோர்களது வழி வகுத்தது.
அகச்சான்றுகளுடன் எடுத்துக்காட்டுவது சிறப்பாகும்.
ஒப்பிலாத திருவாய்மொழி "ஈடு இணையற்றது
என்று இந்நூலால் உணரலாம்.

ஒத்துக்கள் இவ்வாய்மொழியைப் போல்
"திருமாலவன் கவியான ஆழ்வாரின் திருவாய்-
மொழிக்கு ஈடு இணை இல்லை என்பது நிரூபித்துள்ளார்.

இந்நூலை அன்பர்களுக்கு இன்றியமையாது
தந்தேயே. வாழ்க! வாழ்க!!

நித்யஸ்ரீ: நித்ய மங்களம்!

அப்பன் பரகால ராமாநுஜ
எம்பார் ஜீயர்.

Srimathe Ramanujaya Namaha
Srimathyai Kothayai Namaha


**H. H. SRI SRI SRI SHATAKOPA RAMANUJA JEEYAR**
**SRI MANAVALA MAMUNI JEEYAR MUTT.**



Andal Sannidhi Street, (Adjacent Andal Temple Gate)
SRIVILLIPUTTUR - 626 125.
Virudhunagar District, Tamilnadu, India.

**परमहंस श्री श्री श्री शटकोप रामानुज जीयर स्वामी**
श्री मनवाल महामुनि जीयर मठ.
आण्टाल सन्निधि वीथि, श्रीविल्लीपुत्तुर - 626 125. तमिलनाडु.





Ph: 04565 - 263222 | www.andaljeeyar.org / email: swamiji@andaljeeyar.org | Cell: 92453 72244


SRIVILLIPUTTUR

Ref:

Date: 6-6-2009

**ஸ்ரீ முகம்**

ஸ்ரீ மதே ராமநுஜாய நம
ஸ்ரீ மத் வர வர முநயே நம

திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ வரதன் (புதுதில்லி) வெளியிட்டுள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் மற்றும் திருவாய்மொழியே நமது ஸித்தாந்தம் என்று இரண்டு பகுதிகளாய் அமைந்துள்ள குறிப்பேட்டிற்கு நமது மங்களாசாசனங்கள்.

ஸித்தாந்தம் என்பது குறிக்கோளையும், ஐதிகங்களையும் பரம்பரை வழக்கங்களையும் குறிப்பிடும். இந்நூல் ஆசிரியர் தம்முடைய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி "ஸகல ஜீவாத்மாக்களும் உய்யும் வழி இளைய சமுதாயித்தனரின் மனதில் நன்கு பதியவேண்டும் என்கிற ஆதங்கத்தில் பிறந்ததே இக்குறிப்பேடு" என்கின்ற அவருடைய மிகச் சிறந்த நோக்கம் அவர் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ரத்தினம் என்பதை தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றது.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் முக்கிய கருத்துக்களையும், மேதினியில் வைகாசி விசாகத்தோன் வேதத்தை செந்தமிழால் விரித்து உரைத்த ஸ்ரீநம்மாழ்வாரின் ஸாம வேத ஸாரம் என்று போற்றப்படுகின்ற திருவாய்மொழியின் சிறந்த கருத்துக்களையும் அனைவரும் புரிந்துக் கொள்ளும் வண்ணம் மிக எளிமையாக கூறியுள்ளது பாராட்டுதற்குரியது.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் மற்றும் திருவாய்மொழி என்கின்ற இரண்டு ஸாகரங்களில் மூழ்கி இரண்டு நல் முத்துக்களை இந்த நூல் வடிவில் அவர் நல்கியுள்ளார். இம்முத்துக்களை ஸ்ரீ வைஷ்ணவர்கள் சூடிக் கொண்டால் பெரும் பேறு பெற்றவர் ஆவர்.

இறுதியாக அவர் அனைத்து ஸ்ரீ வைஷ்ணவர்களும் அவரவர் ஆசார்யரை ஆஸ்ரயித்து நமது ஸித்தாந்தை, திருவாய்மொழியின் ஆழ்ந்த உட்கருத்துக்களையும் கேட்டறிந்து உய்ய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன் எனக் கூறியுள்ளது. அவருடைய ஆசார்ய பக்தியையும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பால் அவர் கொண்டுள்ள மாளாத அன்பையும் வெளிப்படுத்துகின்றது.

மேலும் மேலும் இது போன்ற நல் முத்துக்களை அவர் நல்கிட நமது மங்களாசாசனங்கள்.,

Srirajeeyar

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சடகோப ராமநுஜ ஜீயர்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

*ஸ்ரீ வைஷ்ணவ பக்தர்களுக்கு*
*நமது ஸித்தாந்தத்தின் முக்கிய கருத்துக்களை முன்னோர்களும், பெரியோர்களும் மொழிந்த வகையில், அடியேனுக்கு தெரிந்த வரையில் தொகுத்து,இந்த குறிப்பேட்டை அளித்துள்ளேன்.சேதுபந்தனத்தில் அணிலும் பங்கேற்றார்போல,அடியேனது இம்முயற்சி, பலரும் ஆசார்யானுக்ரஹம் பெற்று, அதன் மூலம் ஸத்விஷய ஞானம் ஏற்பட்டு,ஸம்ப்ரதாயம் தழைக்க ஹேதுவாகும் என ப்ரார்த்திக்கிறேன்.*

## பொருளடக்கம்     பக்கம் எண்


### முதல் பகுதி
### ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம்

| | |
|---|---|
| முன்னுரை | 3 |
| ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் | 4 |
| தத்வத்ரயம் - விஸிஷ்டாத்வைதம் | 5 |
| ஸம்பிரதாயத்தின் தனிச்சிறப்பு | 6 |
| சித் - அசித் - ஈஸ்வரன் | 7-16 |
| சில விளக்கங்கள் | 16 |
| முமுக்ஷுவின் உபாயம்- உபாயாந்திரங்கள் | 18-22 |
| திருமந்த்ரம் | 19 |
| த்வயம் | 20 |
| சரம ஶ்லோகம் | 22 |
| அர்த்த பஞ்சகம் | 23 |

### இரண்டாம் பகுதி
### திருவாய்மொழியே நமது ஸித்தாந்தம்

| | |
|---|---|
| திருவாய்மொழியின் சிறப்பு | 24 |
| திருவாய்மொழியில் கண்டபடி அர்த்த பஞ்சகம் | |
| பரமாத்ம ஸ்வரூபம் | 26 |
| ஜீவாத்மாவின் தன்மை | 31 |
| பரமாத்மாவை அடையும் வழி (உபாயம்)-முக்தி மார்க்கம் | 33 |
| அடையும் வழியில் தடைகள் -விரோதி ஸ்வரூபம் | 36 |
| அடைவதன் பலன் ( புருஷார்த்தம்)- கைங்கர்யம் | 38 |
| முடிவுரை | 41 |



**வழிகாட்டிய புத்தகங்கள்**

**ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம்**
**- ஸ்ரீ உ வே தி.ந.ச ஸ்ரீசைல சக்ரவரத்தியாசாரியார் (1948)**

**திருவாய்மொழி உரை**
**-Dr. மதி ஸ்ரீனிவாசன்**

**ஸ்ரீ பிள்ளை லோகாச்சாரியரின் தத்வ விவேகம்**
**-விளக்க உரை Dr M.A.வேங்கடகிருஷ்ணன்**




| | ஸ்ரீ பேரருளாளன் பெருந்தேவிதாயார் திருவடிகளே சரணம்<br>ஸ்ரீமத் யாமுந முநயே நம:<br>ஸ்ரீமதே ராமானுஜாய நம:<br>ஸ்ரீ ஸுந்தரார்ய குரவே நம: |
|---|---|
| | **குருபரம்பரை தனியன்கள்** |
| **ஸ்ரீ பெரியபிராட்டியார்** | நம: ஸ்ரீரங்கநாயக்யை யத்ப்ரூவிப்ரமபேதத:<br>ஈஸேசிதவ்ய வைஷம்ய நிம்நோந்நதமிதம் ஜகத் |
| **ஸ்ரீ பெரிய பெருமாள்** | ஸ்ரீஸ்தநாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேசயமாஸ்ரயே<br>சிந்தாமணி மிவோத்பாந்தம் உத்ஸங்கே அநந்தபோகிந: |
| **ஸ்ரீ பத்மாவதி தாயார்** | ஸமஸ்த ஜனனீம் வந்தே சைதன்ய ஸ்தன்ய தாயிநீம்<br>ஸ்ரேயஸீம் ஸ்ரீநிவாஸஸ்ய கருணாமிவரூபிணீம் |
| **ஸ்ரீநிவாஸர்** | ஸ்ரீவேங்கடேஸ தயிதாம் ச்ரியம் கடகபாவத:<br>ஸமாச்ருத்ய வ்ருஷாத்ரீச சரணௌ சரணம் ச்ரியே |
| **ஸ்ரீ பெருந்தேவி தாயார்** | ஆகாரத்ரய ஸம்பன்னாம் அரவிந்த நிவாஸிநீம்<br>அசேஷ ஜகதிசித்ரீம் வந்தே வரத வல்லபாம் |
| **ஸ்ரீ பேரருளாளன்** | வரதம் த்விரதாத்ரீசம் ஸ்ரீநிதிம் கருணாநிதிம்<br>சரண்யம் சரணம் யாமி ப்ரணதார்த்தி ஹரம் ஹரிம் |
| **ஸ்ரீ விஷவக்ஸேனர்** | ஸ்ரீ ரங்கசந்திர மஸமிந்திரயா விஹர்த்தும்<br>விந்யஸ்ய விச்வ சித சிந்நயநாதிகாரம்<br>யோநிர்வஹத்ய நிஸமங்குலி முத்ரயைவ<br>ஸேநாந்யமன்ய விமுகாஸ்தம ஸிச்ரியாம |
| **ஸ்ரீ நம்மாழ்வார்** | மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி:<br>ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்<br>ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்<br>ஸ்ரீமத் ததங்கரி யுகளம் ப்ரணமாமி மூர்தநா |
| **ஸ்ரீ நாதமுனிகள்** | நமோSசிந்த்யாத் புதாக்லிஷ்டஜ்ஞான வைராக்யராஸயே<br>நாதாய முநயேSகாத பகவத் பக்தி ஸிந்தவே |
| **ஸ்ரீ ஆளவந்தார்** | யத்பதாம்போருஹத்யான வித்வஸ்தாசேஷகல்மஷ:<br>வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமிதம் |
| **ஈச்சம்பாடி<br>ஸ்ரீ அழகப்பிரான** | ஸ்ரீமத் யாமுந யோகிந பதயுகம் ப்ராப்தம்<br>பரம் ஸாதநம் தத்காருண்ய கடாக்ஷலப்த<br>ஸகலத்ரையந்த வித்யாநிதிம் பத்மேசஸ்ய<br>புரோதஸம புஜகராட் பூமிதர ஸ்வாமி ந:<br>கௌண்டின்யாந்வய பூஷணம் குருவரம் ஸ்ரீ ஸுந்தரேஸம் பஜே |

| | |
|---|---|
| | ஸ்ரீ பேரருளாளன் பெருந்தேவி தாயார் திருவடிகளே சரணம்<br>ஸ்ரீமத் யாமுந முந யே நம:<br>ஸ்ரீமதே ராமானுஜாய நம :<br>ஸ்ரீ ஸுந்தரார்ய குரவே நம : |
| | **குருபரம்பரை தனியன்கள் (தொடர்ச்சி )** |
| **ஈச்சம்பாடி**<br>**ஸ்ரீ அழகப்பிரான**<br>(ஸ்ரீ பாஷ்யகாரர் விஷயமாக | ஸ்ரீ ஸுந்தராசார்ய வரோபநிஷ்ட<br>ஸ்ரீ தாபநீயோபநிஷத் ரஹஸ்யம்<br>ஸ்ரீமந் தமஸ்மத் குலதேசிகம் தம்<br>ஸ்ரீ பாஷ்யகாரம் யதிராஜமீடே |
| **ஸ்ரீ ராமானுஜர்** | யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம<br>வ்யாமோஹத ஸ்ததிதராணி த்ருணாய மேநே<br>அஸ்மத் குரோர் பகவததோஸ்ய தயைக ஸிந்தோ:<br>ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே |
| **ஸ்ரீ மணவாள மாமுனிக** | ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்<br>யதீந்த்ர பிரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முனிம் |
| **ஸ்ரீ அனந்தாச்சாரியார்** | வாநாசல மஹாயோகி பதபங்கஜ ஸம்ஸ்ரயம்<br>ஸ்ரீ கௌண்டின்யாந் வயோதம்சம் ஆத்ரயே அனந்த தேசிகம் |
| **ஸ்ரீ வரதாச்சாரியார்** | கௌண்டிந்யவம்ச கலசாம் ஹுஹி பூர்ண சந்தரம்<br>ஸ்ரீ ஸ்ரீனிவாச குருவர்ய பதாப்ஜ ப்ருங்கம்<br>தஸ்மாத் அவாப்த நிகமாந்த ரஹஸ்ய ஸாரம்<br>வாத்ஸல்ய பூர்ணம் வரதார்ய அஹம் ப்ரபத்யே |
| **ஸ்ரீ திருமலாச்சாரியார்** | கௌண்டிந்ய வரதாசார்ய பதபங்கஜ ஸம்ஸ்ரயம்<br>ஸ்ரீஸைலார்ய அஹம் வந்தே ஷீலாதி குண ஸாகரம் |
| **ஸ்ரீ லக்ஷ்மிநரஸிம்ஹாச்சாரியார்** | |
| | கடிகேச கிருபா பாத்ரம் கௌண்டிந்ய குல பூஷணம்<br>ஸ்ரீஸைலார்ய ஸத் சிஷ்யம் வந்தே ஸ்ரீந்ருஸிம்ஹாத்வயம் |

***குறிப்பு***

*ஶ்/ஶ என்ற எழுத்து "श" எனும் ஸம்ஸ்க்ரித எழுத்தை குறிக்கும் வகையில் "स-ஸ" விற்கும் "ष-ஷ" விற்கும் இடைப்பட்ட உச்சரிப்பாக இந்த குறிப்பேட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.*

श्री :

श्रियै नमः

अस्मद्गुरुपरम्परायै नमः

अशेष चिदचिद्वस्तु शेषिणे शेषशायिने

निर्मलानन्त कल्याणनिधये विष्णवे नमः

*அஶேஷ சிதசித் வஸ்து ஶேஷிணே ஶேஷஶாயினே*

*நிர்மலானந்த கல்யாண நிதயே விஷ்ணவே நமஃ*

**முன்னுரை**

ஸம்ஸார பந்தத்தில் மூழ்கி லௌகிக காரியங்களில் மனம் ஈடுபட்டு, பொழுதைக்கழித்து வரும் நமக்கு, குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கு, அநாதியான,ஒப்பற்ற நமது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திலுள்ள அடிப்படை கருத்துக்களும்,தத்வ ஞானமும்,ஸகல ஜீவாத்மாக்கள் உய்யும் வழியும் நமது பூர்வர்கள் அருளியபடி, மனத்தில் நன்கு பதியவேண்டுமென்ற ஆதங்கத்தில் பிறந்ததே இக்குறிப்பேடு.

கரையில்லாத கடல்போல விரிந்தும் பரந்தும்,மதிப்பிடமுடியாத பொக்கிஷமுமான, நமது ஶ்ருதிகளிலும்,இதிஹாஸபுராணங்களிலும் நாம் தெரிந்துகொள்ளவேண்டியவை எவ்வளவோ உள்ளன.இவற்றிலிருந்து நம் வாழ்நாளில்,எது மிகவும் ஸாரமானதோ, மிகவும் அத்யாவசியமானதோ, அந்த அளவாவது ஸத்விஷயங்களை எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் அறிய வேண்டும். நமது பூர்வர்கள் அருளியபடி அவரவர் ஆசார்யரை ஆஶ்ரயித்து,படிப்படியாக விஷயஞானம் பெற்று அதன்படி நடக்கவேண்டும். அந்த அவாவைத்தூண்டுவதில்,இந்த குறிப்பேடு ஒரு கருவியாக இருக்கும் என நம்புகிறேன்.இந்த அவா நிறைவேறுவதும் அவன் திருவுள்ளமே.

**பொருளடக்கம்**

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் என்றால் என்ன,முக்கிய கருத்துக்கள் எவை என்பதைப் பற்றி **முதல் பகுதியிலும்**, மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார்,திருவாய் மலர்ந்தருளிய ஸாமவேதஸாரம் என்று சொல்லப் படுகிற, **திருவாய்மொழியில் நமது ஸித்தாந்தத்தின் கருத்துக்களை,** அவர் எளிமையாக விளக்கியுள்ளதைப் பற்றி **இரண்டாம் பகுதியிலும்,** அடியேனுக்குத்தெரிந்தவரையில் எளிமையாக குறிப்பிட்டுள்ளேன். இதில் ஏதேனும் குற்றம் குறை இருந்தால், அதைப்பொறுத்தருளி, அடியேனை திருத்துமாறு பிரார்த்திக்கிறேன்.

"பொலிக! பொலிக! பொலிக! போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டு கொள்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப்புகுந்து இசை பாடி ஆடி உழிதரக் கண்டோம்."**(திருவாய்மொழி-5.2.1)**

*[நம்மாழ்வார் எம்பெருமானின் அடியார்களாகிய ஸ்ரீவைஷ்ணவர்களை மங்களாஸாசனம் செய்து,ஸ்ரீவைஷ்ணவம் என்றும் தழைத்து பொலிவுடன் இருக்கும் என்பதை தெரிவிக்கிறார்.]*

## *முதல்பகுதி*
## *ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம்*

நமது ஸித்தாந்தத்தில் ஆறு விழயங்கள் அடிப்படை ஆதாரங்களாக கொள்ளப்படுகின்றன.அவையாவன ஶ்ருதி,ஸ்ம்ருதி,இதிஹாஸம்,புராணம், ஆகமம் மற்றும் தரிசனம் என்பதாகும்.வேதங்களும்(பூர்வபாகம்),உபநிஷத்-துக்களும் (உத்தரபாகம்) ஶ்ருதிகளாகும். இவைஅநாதியானவை, அபௌருஷேயமானவை. ஶ்ருதிகளில் கூறப்பட்டவற்றுக்கு ரிஷிகளால் விளக்கம் சொல்லப்பட்டவை ஸ்ம்ருதிகள் எனப்படுகின்றன.பகவத் கடாக்ஷத்தினால் ரிஷிகளின் மூலமாக நமக்கு கிடைக்கப்பட்டவை இவை. இதிஹாஸங்களும், புராணங்களும் பத்தராயனர் எனும் வேதவ்யாஸரால் இயற்றப்பட்டவை.நியமநிஷ்டைகளையும்,வழிமுறைகளையும் தெரிவிப்பன ஆகமங்கள்.

வேதங்களில் கூறப்பட்டவற்றை அறிய ஹேதுவாகும் முறைகளை கூறுபவை தரிசனம் எனப்படுவன.இவை ஷட்தரிசனம் என ஆறுவிதமாக ஆறுரிஷிகளால் உருவாக்கப்பட்டது.நியாயம்-கௌதம மகரிஷி, வைசேஷிகம்-கணாதமகரிஷி,சாங்க்யம்-கபில மகரிஷி,யோகம்-பதஞ்ஜலி மகரிஷி, மீமாம்ஸை-ஜைமினி மகரிஷி,வேதாந்தம்-வேதவ்யாஸ மகரிஷி. வேதங்கள் அனைத்தாலும் போற்றப்பட்டவனும், அனைத்தையும் இயங்கச் செய்பவனும் ஸ்ரீமந்நாராயணனே.அவனே அனைவர்க்கும் ஈஶ்வரனென்பதை வேதவ்யாஸர் பிரமாணங்களின் மூலம் தெளிவுற நிரூபித்துள்ளார்.

வேதங்களின் பிற்பகுதிகளாகிய ஞானகாண்டத்தில் கூறப்பட்டுள்ளவற்றை ஆராய்ந்து முடிவுகளாக அறிவிக்கப்பட்டவையே சூத்திரங்களாகும்.அப்படி வேதவ்யாஸரால் எழுதப்பட்டது ப்ரஹ்மஸூத்திரம். இதிலுள்ள 545 சூத்திரங்களை ஆராய்ந்து எல்லோரும் புரிந்துகொள்ளும்படி, ஸ்ரீராமானுஜரால் அளிக்கப்பட்ட உரையே ஸ்ரீ பாஷ்யம் ஆகும்.

இப்படியாக வேதங்களாலும், உபநிஷத்துக்களாலும், இதிஹாஸ புராணங்-களாலும், ப்ரஹ்ம சூத்திரத்தாலும் கூறப்பட்ட கருத்துக்களின் வடிவமே நமது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம். இவற்றின்படி ஸ்ரீமந்நாராயணனே எல்லோர்க்கும் பரமாத்மா.அவனே இந்த ப்ரக்ருதியை இயக்கி வைக்கிறான். அவனை சரணடைந்து அவனுக்கு கைங்கர்யம் செய்வதே, எல்லா ஜீவாத்மாக் களுக்கும் உபாயம் , ப்ராப்யம் (means and goal) என்பதே நமது ஸித்தாந்தம்.

உபநிஷத்தில் "**நாராயணம் பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோஜ்யோதி: ஆத்மா நாராயண: பர**:" என்று சொன்னபடியும், "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்றபடியும், " ஈசன ஶ்ரீலோ நாராயண ஏவ" என்றபடியும் , "ஏகோஹவை நாராயண ஆஸீத், ந ப்ரஹ்ம நேசாந: நேமே த்யாவா ப்ருத்வீ, நேமே நக்ஷத்ராணி" என்றபடியும் , "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே : நாராயணாத் ருத்ரோ ஜாயதே " என்றபடியும் ஸ்ரீமந் நாராயணனே எல்லோர்க்கும் பரம்பொருள்.

## தத்வத்ரயம் & விசிஷ்டாத்வைதம்

மேற்கூறிய ஶ்ருதிகள், ஸ்ம்ருதிகளிலிருந்து வியாஸர், போதாயனர், குஹதேவர், பாருசி , ப்ரஹ்மநந்தி, டங்கர் , த்ரமிடாச்சாரியர் மற்றும் ஆழ்வார்கள்,ஆசார்யர்களால் நமக்கு பிரமேயமாக(தெரிந்து கொள்ள வேண்டியவையாக) சொல்லப்பட்டவை மூன்று –அவையாவன தத்வம், ஹிதம் புருஷார்த்தம்.
"तत्वज्ञानान्मुक्ति"(தத்வ ஞானான் முக்தி),"भोक्ता भोग्यं प्रेरितारंचमत्वा जुषटस्ततस्तेनामृतत्वमेति" *"போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்சமத்வா ஜுஷ்டஸ் ததஸ்தேநாம்ருதத்வமேதி* "(ஸ்வேதஸ்வர. உப.)என்றபடி மூன்று தத்வங் களையும், அவற்றின் ஸ்வரூபஸ்வபாவங்களையும் அறிந்து, அந்த ஞானத் தினால் ஈஶ்வரனை மகிழ்வித்து அதனாலேற்படும் அவனது கிருபையினால் முக்தி பெறமுடியும் என்று ஸாதித்துள்ளார் ஸ்ரீபிள்ளைலோகாசார்யர்.

ஸ்ரீஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில்,ஸ்ரீபராசரமுனிவரை நமஸ்கரித்து, அவர் புராண ரத்னம் என்று சொல்லப்படுகிற விஷ்ணு புராணத்தை இயற்றியதையும், அதில் சித், அசித்,ஈஶ்வர தத்வங்களின் விளக்கமும், ஜீவாத்மாக்கள் உய்யும் வழியும் சொல்லப்பட்டிருப்பதை,"तत्वेनयश्चिदचिदीश्वर तत्स्वभाव भोगापवर्गतदुपायगतीरुदारः। संदर्शयन निरमिमीत पुराणरत्नं तस्मै नमो मुनिवराय पराशराय ॥ *"தத்வேந யஸ்சிதசிதீஶ்வர தத்ஸ்வபாவ போகாபவர்க ததுபாயகதீருதார: ஸந்தர்ஶயன் நிரமிமீத புராண ரத்னம் தஸ்மை நமோ முனிவராய* பராஶராய" என்றவாறு சொல்கிறார்.

**தத்வம்:** சேதனன்(சித்), அசேதனன்(அசித்), ஈஸ்வரன் (பரமாத்மா) ஆகிய மூன்றும் தத்வத்ரயமாகும். இந்த மூன்றையும் ஒருமைப்படுத்தி,சேதனா சேதனங்களை சரீரமாக (விசேஷணமாகக்கொண்ட) பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனே ஸத்யம்,**பரதத்வம்**.இவற்றை அறிவது மிக அவசியம்.
**ஹிதம் :–**(உபாயம்)ஸ்ரீமந்நாராயணனை அடைய ஶ்ருதிகளில் பல வழிகள் (கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம்) சொல்லப்பட்டிருந்தாலும், இன்றைய கலிகாலத்தில் இவற்றை கடைப்பிடிப்பது இயலாது.எல்லோரும் கடைப்பிடிக்க எளியவழி,அவனது திருவடிகளை தஞ்சமாகப்பற்றி சரணாகதி அடைவதே ஆகும்.இதற்கு மேல் சிறந்த உபாயமில்லை. இதுவே **பரமஹிதம்.**
**புருஷார்த்தம்:** இது புருஷனால்(ஜீவாத்மாவால்),அர்த்திக்கப்படும் (வேண்டப்படும் ) பலனை குறிக்கிறது. இதை தர்மம்,அர்த்தம் (பொருள்), காமம், கைவல்யம்(ஆத்மானுபவம்),மோக்ஷம்(வீடு)என ஐந்தாகச்சொல்வர். ஸதா அவனையே நினைத்து அவனுக்கு கைங்கர்யம் செய்ய விரும்புவது, மோக்ஷத்திற்குப்பின் அவனையடைந்து ஸர்வகாலமும் எம்பெருமானுக்கு எல்லாவிதமான தொண்டுகளைச்செய்வதே சகல ஜீவாத்மாக்களுக்கும் **பரம புருஷார்த்தம்.**

விசிஷ்டாத்வைதம் எனபதற்கு (விசிஷ்டாஸ்ய=ஸ்தூலசூக்ஷ்ம விசேஷண-ங்களுடன் கூடிய, அத்விதீயம் =இரண்டில்லாத தன்மை) என்று பொருள். அபேத ஶ்ருதிகளை மட்டுமே ஆதாரமாகக்கொண்டு இரண்டில்லாத தன்மையை சொல்லுவது அத்வைதம். பேத ஶ்ருதிகளையே ஆதாரமாகக் கொண்டு இரண்டான தன்மையைச்சொல்லுவது த்வைதம்.ஆனால் பேத, அபேத,கடக ஶ்ருதிகள்அனைத்தையுமே ஆதாரமாகக்கொண்டு,விசேஷ-ணங்களுடன் கூடிய இரண்டில்லாத தன்மையைச்சொல்லுவதே நமது விசிஷ்டாத்வைதம்.

அத்வைதிகளின் நிர்குண ப்ரஹ்மத்தை ஆமோதிக்காமல்,சகல கல்யாண குணங்களை உடைய, பிராட்டியுடன் கூடிய ஸ்ரீமந்நநாராயணனே (சகுண ப்ரஹ்மம்) எல்லோர்க்கும் பரமாத்மா.அவனே எல்லா ஆத்மாக்களையும் (சித்), அசேதனங்களையும் (அசித்) சரீரமாகக்கொண்டு, இணை பிரியாது நித்யமாய் இருக்கும் உண்மைப்பொருள் என்பதே நமது ஸித்தாந்தம்.

**நமது ஸித்தாந்தத்தின் தனிச்சிறப்பு**

மேலே சொல்லப்பட்ட சரீராத்மபாவ சம்பந்தமே நமது ஸித்தாந்தத்தின் பிரதான பிரதிதந்திரம் (differentiator).अपृथकिसद्ध विशेषणं (அப்ருதகிஸத்த விசேஷணம்) என்கிறபடி இந்தஸம்பந்தம் பிரிக்கமுடியாதது.இதனால் உண்டாகும் பூரணத்துவம் மற்ற ஸித்தாந்த்தங்களுக்கு கிடையாது.

ஶ்ருதிகளில் சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றை குறிக்கும் பேத ஶ்ருதிகள் உள்ளன. மற்றும் சில இடங்களில் "யாதும் ஒன்றே" என்று சொல்லும் அபேத ஶ்ருதிகள் உள்ளன. அதேபோல ப்ரஹ்மம் சிதசித் குணங்களுடன் கூடியது என்று கூறும் சகுண ஶ்ருதிகள் உள்ளன. சில இடங்களில் நிர்குண ஶ்ருதிகளும் உள்ளன. (நிர்குணம்–ஹேய-*குணமின்மை) –ஹேய பிரத்யநீகத்வம்*

ஆத்மாவும்,ப்ரஹ்மமும் வேறுபட்டது,ஒன்றல்ல எனும் த்வைதிகளுக்கு (மத்வர்களுக்கு) பேத ஶ்ருதிகளும் , நிர்குண ஶ்ருதிகளும் மட்டுமே பொருந்தும். மற்றவை பொருந்தாது.

நிர்குண ப்ரஹ்மம் ஒன்றே சத்யம் என்றும், மற்றவை அனைத்தும் மாயை என்றும், இதனால் அத்வைதமான (இரண்டற்ற) ப்ரஹ்மமே நிலையானது என்று கூறும் அத்வைதிகளுக்கு நிர்குண ஶ்ருதிகளும், அபேத ஶ்ருதிகளும் மட்டுமே பொருந்தும். மற்றவை பொருந்தாது . கடக ஶ்ருதிகள் இந்த இரண்டு ஸித்தாந்தங்களிலும் பொருந்தாது.

விசிஷ்டாத்வைதிகளான நமக்கு,சேதனாசேதனர்களுக்கும்,ஈஸ்வரனுக்கும் உள்ள சரீராத்மபாவசம்பந்தத்தை குறிக்கும் கடகஶ்ருதிகளினால்,அனைத்து ஶ்ருதிகளும் பொருந்துகின்றன.அந்தந்த பின்னங்களான, இந்த மூன்று தத்வங்களின் ஸ்வரூபத்தை பிரித்துச்சொல்லும்போது, பேத ஶ்ருதிகளும், சரீரவிசிஷ்டமான பரமாத்மாவை ஒன்று என விவரிக்கும்போது அபேத ஶ்ருதிகளும் பொருந்துகின்றன.ப்ரஹ்மத்திறகு ஸமஸ்த கல்யாணகுணங் களையும் போதிப்பதால் சகுண ஶ்ருதிகளும், யாதொரு இழி குணங்களும்

ப்ரஹ்மத்தினிடம் இல்லை எனும்போது நிர்குண ஶ்ருதிகளும் துல்ய பலமானவை (பிரமாணமாக அங்கீகரிக்கப்படுகின்றன).

ஶ்ருதிகளானவை,அத்யந்தம் பின்னங்களாயிருக்கும் சேதனன்,அசேதனம், ப்ரஹ்மம் இம்மூன்றையும் சில இடங்களில் தனித்தனியாகவும், ஸூஸ்வரூபமாக சில இடங்களில் சேர்த்தும் சொல்கின்றன.பரமாத்மாவை மற்ற இரண்டிற்கும் சரீரியாக்கி காரணாவஸ்த்தையாலும்,கார்யாவஸ்தை யாலும் அவன் ஒரே தத்வம் என நிரூபிப்பது நமது சித்தாந்தத்தின் தனிச்சிறப்பு.

## சித், அசித், ஈஶ்வர ஸ்வரூபங்கள்

रामानुजाङ्घ्रिरजसा[2] तेजितस्वान्तदर्पणे।
प्रतिबिम्बतु याथार्थ्यमात्मानात्मतदात्मनाम्॥

தத்வ ஞானத்தால் மோக்ஷலாபம் என ஸ்ரீபிள்ளைலோகாசார்யர் ஸாதித்--துள்ளார். "எம்பெருமானாரின் திருவடிப்பொடிகளினால் துலக்கப்பட்ட உங்கள்மனமாகிய கண்ணாடியில்,சித்,அசித், ஈஶ்வரன் இவர்களைப்பற்றின உண்மைகள் பிரதிபிம்பம்போல் தோற்றட்டும்"என தத்வவிவேகம் என்றநூலில் அவர் கூறியுள்ளார்.

மூன்று தத்வங்களைப் அறியவேண்டிய ஞானத்தைப் பற்றி ஶ்ருதிகளில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

“तमेवं विद्वानमृत इह भवति”, (तै.आ.पु. 3-13-17)
“तमेव विदित्वा अतिमृत्युमेति” (श्वे.उ. 3-8)

பகவானை அறிந்து கொண்ட ஞானி முக்தனுக்கு சமமாகிறான் என்றும், பகவானை அறிந்து கொண்ட ஞானத்துடனேயே ஸம்ஸாரத்தை தாண்ட வேண்டும் என்றும் உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டுள்ளது.

### 1.சித் - (ஆத்மா), (சேதனன்) ( soul)

ஜீவாத்மா ஆனந்தரூபமாய், அஜடமாய், நித்யமாய், அணுவாய், அவ்யக்தமாய், அசிந்த்யமாய், நிரவயவமாய், ஞானத்துக்கு இருப்பிடமாய், ஈஶ்வரனுக்கு சரீரமாய் இருக்கும் என ஸ்ருதிகள் சொல்லுகின்றன.
ஜீவன்கள் அனந்தம் (Infinite in number).ஆனந்தமயஸ்த்வாத்மா (ஆனந்தமயஸ்த்-வாத்மா)என்றபடி ஆனந்தமயமானது.**अन्योन्तर आत्मा विज्ञानमयः**(அன்யோந்தர ஆத்மா விஞ்ஞானமய:) என்றபடி அறிவுபூர்வமானது.ஆத்மா ஞானமயோऽமல: (ஆத்மா ஞானமயோऽமல:) என்றபடி விஷ்ணுபுராணத்தில் உள்ளது.
அஜடமாயிருக்கையாவது,ஸ்வயம் பிரகாசமாயிருக்கும் தன்மையாகும்.
அத்ராயம் புருஷ: ஸ்வயம்ஜ்யோதிர்பவதி (அத்ராயம் புருஷ: ஸ்வயம்ஜ்யோதிர்பவதி)என்பது இதையே குறிக்கிறது." நித்யம்" அழிவற்ற தன்மையை குறிக்கிறது.
ஆத்மா தேஹத்தோடு சம்பந்தப்படுவதை ***ஜன்மம்*** என்றும்,அதை விட்டு பிரிவதை"***மரணம்"*** என்றும் அறிகிறோம்.ஆத்மாவிற்கு என்றுமழிவில்லை.
ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித (ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித்) என்றபடி.

"एषोऽणुरात्मा"(ஏஷோ:அணுராத்மா)என்றபடியும்,"बालाग्रशतभागस्य शतधा कल्पितस्य च भागो जीवः स विज्ञेयः स चानन्त्याय कल्पते "– *ஸ்வேதஸ்வர உபநிஷத்* (5–9)
*"பாலாக்ரஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச பாகோ ஜீவ:*
*ஸ விஞேய: ஸ சானந்த்யாய கல்பதே"* என்றபடியும்
மயிர்நுனியில் நூறில் ஒன்றிலும் நூறில் ஒரு பங்கு பிரமாணம் உள்ளது ஜீவன் எனப்படும் ஆத்மா. நிரவயவத்வமாவது அவயவங்களில்லாத தன்மை. அங்கங்கள் இல்லாததாகவும், மாறுபாடு எதுவுமடையாமல், நிர்விகார தத்வமுமாகவும் உள்ளது.
பகவானே ஆத்மாவைப்பற்றி கீதையில் சொல்லியது :–

अविनाशि तु तद्विद्धि येन सर्वमिदं ततं।
विनाशमव्ययस्यास्य न कश्चित्कर्तुमर्हति॥ பகவத் *கீதை* (2-17)
*"அவினாஶி து தத்வித்தி ஏன ஸர்வமிதம் ததம்।*
*விநாஶமவ்யயஸ்யாஸ்ய ந கஸ்சித்கர்துமர்ஹதி॥"*
எல்லா சரீரங்களிலும் வ்யாபித்துள்ள ஆத்மா அழிக்கமுடியாதது. நித்யமானது.

न जायते म्रियते वा कदाचिन्नायम भूत्वा भविता वा न भूयः।
अजो नित्यः शाश्वतो यम् पुराणो न हन्यते हन्यमाने शरीरे॥ பகவத் கீதை 2–20
*"ந ஜாயதே ம்ரியதே வா கதாசின்னாயம் பூத்வா பவிதா வா ந பூய:*
*அஜோ நித்ய:ஶாச்வதோ யம் புராணோ ந ஹன்யதே ஹன்யமானே ஶரீரே"*
ஆத்மாவிற்கு பிறப்புமில்லை;இறப்புமில்லை. அது நித்யமானது. மரணத்தில் சரீரம் மறையும்போது ஆத்மா அழிவதில்லை என்பதே பொருள்.

नैनं छिन्दन्ति शस्त्राणि नैनं ढहति पावकः।
न चैनं कलेदयन्त्यापो न शोषयति मारुतः ।।"–*கீதை* (2–23)
*"நைநம் சிந்தந்தி ஶஸ்த்ராணி நைநம் டஹதி பாவக:*
*ந சைனம் கலேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத:"*–ஆத்மாவை நீரால் நினைக்க முடியாது. நெருப்பால் சுடமுடியாது. ஆயுதத்தால்பிளக்கமுடியாது.

ஜீவாத்மா அவ்யக்தனாகவும், அசிந்த்யனாகவும், அவிகார்யனாகவும் இருக்கிறான் என்பதை கீதையில் " अव्यक्तोयम अचिंत्योयम अविकार्योयम उच्यते" *(அவ்யக்தோயம் அசிந்த்யோயம் அவிகார்யோயம் உச்யதே)* என்றவாறாக சொல்லப்பட்டுள்ளது .அவ்யக்தமாவது கண்களுக்கு தோற்றாதிருக்கை. உலக விஷயங்களை உணரும் இந்திரியங்களால் உணரமுடியாத தன்மை .அசிந்த்யமென்பது "இன்னவாறு இருக்கும்" என்று நினைக்க வொண்ணாத தன்மை.

समाने वृक्षे पुरुषो निमग्नोऽनीशया शोचति मुह्यमानः।
जुष्टं यदा पश्यत्यन्य मीशमस्य महिमानमिति वीतशोकः ॥ (ஸ்வேதஸ்வர, முண்டக உப)
*"ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்னோ நீஶயா ஷோசதி ம்ருஹ்யமாந: ।*
*ஜுஷ்டம் யதா பஶ்யத்யன்ய மீஶமஸ்ய மஹிமாநமிதி வீதஷோக:॥"*
இவ்வுலக சுகதுக்கங்களாகிய மரத்தில் வாழும் ஆத்மாவாகிய பறவை பரமாத்மாவின் ஸ்வரூபத்தையும் மேன்மையையும் அறிந்து அவனிடம் சரணடைந்தபின் அந்த சுகதுக்கங்களிலிருந்து விடுபடுகிறது.

ஜீவாத்மா எம்பெருமானுக்கு ஸேஷபூதனாகவுமுள்ளான். "ஸேஷத்வம்" என்றால் தனக்கு மேன்மையை உண்டாக்குவதற்காக,பகவானால்,அவனது விருப்பப்படி கைகொள்ளப்படுவதற்கு தகுந்தவனாக இருத்தல். "शेषभूतश्च" , (சேஷபூதஸ்ச) என்றபடியும், "आत्मदास्यं हरेस्स्वाम्यं" (ஆத்மதாஸ்யம் ஹரேஸ்வாம்யம்) என்று சொன்னபடியும் வஸ்த்ரத்தின் வெண்மையைப் போல பிரிக்கமுடியாமல் "ப்ரகாரதயா சேஷமாய்" உள்ள தன்மை. இப்படிப்பட்ட ஆத்மா /ஆத்மாக்கள், எம்பெருமானுக்கு ஸரீரமாக உள்ளன என்பது,நமது சித்தாந்தத்தின் சிறந்த கருத்து."यस्यात्मा शरीरमःयस्य पृथिवी शरीरं" (யஸ்ய ஆத்மா சரீரம்: யஸ்ய ப்ருத்வீ சரீரம்)என்பது உபநிஷத் வாக்கியம்.ஆத்மாக்கள் ஸ்வரூபத்தில் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை அல்ல."ज्ञानं तदरूपाख्यं ज्ञानानन्दैकलक्षणम"(ஞானம் ததரூபாக்யம் ஞானானந்–தைகலக்ஷணம் ) என்றபடி ஆத்மா ஞானம்,ஆனந்தம் இவற்றையே நிரூபக தர்மங்களாக கொண்டவன்.ப்ரஹ்மம் ஆத்மாவை உள்ளிருந்து நியமிக்கிறான். य आत्मानं अन्तरो यमयति (ய ஆத்மானம் அந்தரோ யமயதி) என்கிறது உபநிஷத்.

ஆத்மாவுக்கு தர்மமாக(குணமாக)உள்ள ஞானம் தர்மபூதஞானம் எனப்படும். இந்த ஞானம் வினைப்பயனின்படி அந்தந்த ஸரீரத்திற்கு ஏற்றவாறு சுருங்கியும், விரிந்தும் இருக்கும். "तया तिरोहितत्वाच्च शक्तिः क्षेत्रज्ञसंज्ञिता। सर्वभूतेषु भूपाला तारतम्येन वर्तते ॥ (வி.புரா) (தயா திரோஹிதத்வாச்ச சக்தி: க்ஷேத்ரஞஸம்ஞி தா சர்வபூதேஷு பூபாலா தாரதம்யேன வர்த்ததே ). நித்யஸுரிகள்,முக்தர்களுக்கு இந்த ஞானம் சுருக்கமின்றி மலர்ந்து இருக்கும். ஸம்சாரிகளுக்கு மட்டுப்பட்ட நிலையிலேயே இருக்கும்.

"इदं च आत्मस्वरूपम बध्द मुक्त नित्यभेदेन त्रिविधम "( இதம் ச ஆத்மஸ்வரூபம் பத்த முக்த நித்யபேதேன த்ரிவிதம்) என்றபடி ஆத்மாக்களை பக்தர்கள், முக்தர்கள், நித்யர்கள் என மூன்றாகப் பிரித்துள்ளர்கள். அநாதிமாயையினால் ஸரீரசம்பந்தம் பெற்று ரஜோ,தமஸ் குணங்களினால்

ஈடுபடுத்தி, இந்த பிரக்ருதியில் (லீலா விபூதியில்) வாழ்ந்து வரும் நாம் அனைவரும் பக்தர்கள். இந்த ஆத்மாக்கள் தேவர், மனிதர், விலங்குகள், தாவரம் என்கிற நான்கு விதமான சரீரங்களில் நுழைந்திருப்பார்கள்.

முக்தர்கள் இரண்டு வகைப்படுவர்கள். ஆசார்ய கடக்ஷத்தால் வேதாந்த சாரத்தை அறிந்தவர்களாய்,மமதாத்யாகம், கர்த்ருத்வத்யாகம், பலசங்கத்யாகம் (நான்,எனது என்பதையும், பலனை எதிர்பார்ப்பதையும் விட்டு)ஆகியவற்றை கர்மயோகத்தினால் பெற்று,பகவானையே சந்தித்து பரமபதத்தை அடைபவர் ஒருவகை. பகவத் குணங்களிலும்,சரிதங்களிலும், பாகவத ஜனங்களிடமும் ஈடுபட்டு, நல்லவர்களாலே உபதேசிக்கப்பட்டு, ஆசார்யார்களுடைய திருவடித்தாமரைகளில் கிட்டுகிறார்கள்.ரஹஸ்யத்ரய அனுசந்தானத்தினால் பகவானின் கடாக்ஷம் பெற்று,பரமபதத்தை அடைபவர்கள் இரண்டாம் வகை.

நித்யர்களோ ஒருநாளும் சம்சாரபந்தத்தில் ஈடுபடாதவர்கள். सदा पश्यन्ति सूरयः(சதா பஶ்யந்தி சூரய:)என்றபடி சதாகாலமும் பகவானுக்கு கைங்கர்யம் செய்துவரும் அனந்த,கருட,விஷ்வக்ஸேநாதிகள் நித்யஸூரிகளாவர். इत्यादिषु तथाभिधानात त्रितयेऽप्येते पृथक् पृथक्(இத்யாதிஷு ததாபிதானாத் த்ரிதயேऽப்யேதே ப்ருதக் ப்ருதக்) என்றபடி இந்த மூன்றுவகை சேதனர்களும் தனித்தனியே எண்ணிலடங்காதவர்கள் दासभूताः स्वतस्सर्वे; ह्यात्मनः परमात्मनः (தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மந: பரமாத்மந: ) என்றபடி எல்லா ஜீவாத்மாக்களும் பரமாத்மாவிற்கு ஸேஷபூதர்கள்.

## 2. அசித் - (அசேதனம்), (Matter)

இவை ஶுத்த சத்வம் (ஸ்ரீ வைகுண்டம்), மிஸ்ரசத்வம் (அண்டம், பிரக்ருதி),ஸத்வஶூன்யம் (காலம்) என்று மூன்றாகும். இவை உயிரற்றவை.

ஸத்வகுணம் ஒன்றே நிறைந்து காணப்படுவது ஸ்ரீவைகுண்டம் (பரமபதம்) எனப்படும் நித்யவிபூதி. இது நித்யமானது. அழிவற்றது. கர்மத்தை அபேக்ஷிக்காமல் பகவானின் இச்சையால் மட்டுமே இயங்கும். யாராலும் வெல்லமுடியாத பட்டணம் ஸ்ரீ வைகுண்டம் என்பதை अपराजिता पूर्ब्रह्मनः (அபராஜிதா பூர்ப்ரஹ்மன:)எனும் உபநிஷத் வாக்கியம் தெரிவிக்கிறது. परमे व्योमन (பரமே வ்யோமன்) என்றபடி இது மேலானதான ஆகாசத்தில் உள்ளது. கர்மங்களிலிருந்து விடுபட்ட சேதனர்களுக்கு அடையத்தக்கது. இது எல்லையற்ற இடமாகவும் அளவிட முடியாததாகவும் உள்ளது.

ஸத்வ குணத்துடன் ரஜஸ்,தமஸ் ஆகிய குணங்கள் கூடியது பிரக்ருதி. त्रिगुणम्तत जगद्योनिः( த்ரிகுணம் தத் ஜகத்யோனி:)என்று விஷ்ணுபுராணத்தில் சொன்னபடியும்,त्रिगुणं कर्मिणाम क्षेत्रं (த்ரிகுணம் கர்மிணாம் க்ஷேத்ரம்) என்று ப்ரஹ்ம ஸம்ஹிதையில் சொன்னபடியும் , மூன்று குணங்களும் உடையது. இப்படி மூன்று குணங்களும் ஒருமித்த மிஸ்ரஸத்வத்தினால் சேதனர்கள்,தங்களது ஜ்ஞானாநந்தங்கள் மறைக்கப்பட்டு,இந்திரியங்களால் கட்டப்பட்டு,ஸரீரசுகத்தை அனுபவித்தும், அவித்யையின் காரணமாகவும் பகவத் ஸ்வரூபத்திலிரிந்து விலகியிருப்பர். ரஜோகுணம் ஆசாபாசங்களில் ஈடுபடுத்தும். தமோ குணத்தினால் விபரீத ஞானம் ஏற்படுகிறது.

இந்த பிரக்ருதி,எம்பெருமானார் ஸ்ரீவைகுண்டகத்யத்தில் சொன்னபடி चतुर्दशभुवनात्मकमण्ड दशगुणितोत्तरमच आवरण सपतकं(சதுர்தசபுவனாத்மாகமண்டம் தசகுணிதோத்தரம் ச ஆவரண ஸப்தகம்) பதினான்கு புவனங்களாக உள்ளது. "अण्डानाम तु सहस्राणाम सहस्राण्ययुतानि च। ईदृशानां तथा तत्र कोटिकोटि शतानि चा॥" (அண்டானாம் து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச।ஈத்ருஶானாம் ததா தத்ர கோடிகோடி ஶதானி சா॥)என விஷ்ணுபுராணத்தில் சொல்லியபடி ஆயிரத்தை ஆயிரத்தால் பெருக்கி,அதை பத்தாயிரத்தால் பெருக்கி, வந்ததை நூறுகோடியால் பெருக்க அண்டங்களின் எண்ணிக்கை வெளிப்படும்.

क्रीड़तो बालकस्येव चेष्टां तस्य निशामयः (க்ரீடதோ பாலகஸ்யேவ சேஷ்டாம் தஸ்ய நிஶாமய:) என்றபடி விஷ்ணுபுராணத்தில் உள்ளது. இதற்கு ப்ரக்ருதி,

பகவானின் லீலோபகரணமாய் இருக்கிறது என்பது அர்த்தமாகும்.

ஸத்வஶூன்யம் என்பது சத்வ, ரஜஸ், தமஸ் என்ற யாதொரு குணமும் இல்லாத" காலத்தைக்" குறிக்கிறது பிரக்ருதியின் பதார்த்தங்களினுடைய பரிணாமத்துக்கு(மாறுதலுக்கு) காரணமாகிறது. அநாதியான காலமானதும் பகவானுடைய சரீரமாகும். இந்தக் காலத்துக்கு அந்தமுமில்லை. இதை अनादिर्भगवान कालः नान्तोस्य द्विज विद्यते (அனாதிர் பகவான் கால: நான்தோஸ்ய த்விஜ வித்யதே) என்ற (வி. புரா.) வாக்யம் சொல்கிறது.

அவ்யக்த ரூபத்திலுள்ள பிரக்ருதியும், ஜீவாத்மாவும், பரமாத்மாவினிடம் லயமடைகிறார்கள் என்பதை पृकृति या मया प्रोक्ता व्यक्ताव्यक्तस्वरूपिणी। पुरुषश्चाप्युभावेतौ लीयते परमात्मनि (வி.புரா .) (ப்ருக்ரிதி யா மயா ப்ரோக்தா வ்யக்தாவ்யக்த ஸ்வரூபிணீ। புருஷஸ்சாப்யுபாவேதௌ லீயதே பரமாத்மநி ) என்பதிலிருந்து அறிகிறோம்.

**3. ஈஶ்வரன் ( பரமாத்மா)**

**ईश्वरस्तु सकलचेतनाचेतननियन्तृत्वात् परमात्मा श्रियःपतिः अभिधीयते।**

ஸ்ருதிகளில் சொல்லப்பட்ட மற்றொரு தத்வமான ஈஶ்வரன் என்பது,சகல கல்யாண குணங்களுடன் கூடிய,மற்ற இரண்டையும்(சேதனா சேதனங்–களை) விசேஷணங்களாகக்கொண்ட, ஸ்ரீமந்நாராயணனையே ஆகும். "ईश्वरो भगवान विष्णुःपरमात्मा ममार्जुन"–ஈஸ்வரோ பகவான் விஷ்ணு பரமாத்மா மமார்ஜுன். "वासुदेवो जगतपति" வாஸுதேவோ ஜகத்பதி "शास्ता विष्णु : अशेषस्य " ஶாஸ்தா விஷ்ணுः அஶேஷஸ்ய, "नारायणः परोज्योतिः" ( நாராயண பரோஜ்யோதி:) என்ற உபநிஷத் வாக்கியங்களினால் இதை அறிகிறோம். ராஜாக்களுக்கும் மேலான ராஜா விஷ்ணு. அவன் எங்கும் வயாபித்து விபுவாக உள்ளான. யாவாக்கும் சேஷியாயிருப்பவன என்பது

*கீழ்க்கண்ட வாக்யத்திலுள்ளது "राजाधिराजस्सर्वेषां विष्णुः ब्रह्मयो महान।*
*ईश्वरं तं विजानीम: स विभुः स प्रजापति: ॥" -- (भारत. आश्वमेधिक)*
*"ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் விஷ்ணுः ப்ரஹ்மயோ மஹான்।*
*ஈஸ்வரம் தம் விஜாநீமः ஸ விபுः ஸ ப்ரஜாபதிः ॥"*

"स्वाधीन त्रिविध चेतनाचेतन स्वरूपस्थिति प्रवृत्तिभेदम" *"ஸ்வாதீன த்ரிவித சேதனாசேதன ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திபேதம்"*. என்று எம்பெருமானார் சொன்னபடி, சேதனாசேதனங்களின் ஸ்திதி, ஸ்வரூபம், ப்ரவ்ருத்தி இவற்றிற்கு பரமாத்மாவே காரணமாயிருக்கிறான். "अपहतपाप्मा दिव्यो देव एको नारायण:"(அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:) -(*ஸுபாலோப.)* என்றபடி ஸ்ரீமந் நாராயணன் ஒப்பற்றவனாயிருக்கிறான்.

"तदात्मानं स्वयामाकृरूत" (ததாத்மானம் ஸ்வயமாக்ருரூத) என்றபடி தன்னையே ஸ்ருஷ்டித்துக்கொள்கிறான். "आत्मेश्वरं " (ஆத்மேஶ்வரம்) என்றபடி, ஸர்வத்துக்கும் ஈஸ்வரனாய், ஸர்வஸேஷியாய், ஸ்வரூபத்தாலும், காலத்தினாலும்,வஸ்துவினாலும் அளவிட முடியாதவனாய் இருக்கிறான்.

உலகில் பொருள்கள் உண்டாவதற்கு மூன்றுவகை காரணங்கள் உள்ளன. **"நிமித்த"**காரணம் (பானையை உருவாக்கும் குயவன்),**"உபாதான"**காரணம் (மண்),**"ஸஹகாரி"** காரணம்(பயன் படுத்தும் கருவிகள்).பகவானும் ஜகத்திற்கு மூன்றுவித காரணமுமாயிருக்கிறான் என்பது நமதுஸித்தாந்தம்.

ஸர்வ காரியத்தையும் உண்டு பண்ணுகிறவனாய்,ஸர்வ ஸப்தவாச்யனாய், ஸர்வ வ்யாபக சேதனனாய், ஸர்வபல ப்ரதாதாவாய், ஸூக்ஷ்ம சிதசித் விஸிஷ்ட வேஷத்தாலே நிமித்த காரணமாய், காலாதிகளுக்கு அந்தர்யாமி வேஷத்தாலே ஸஹகாரிகாரணமாய் இருக்கிறான்."இவன் தானே ஜகத்தாகப் பரிணாமிக்கையாலே உபாதானமுமாயிருக்கும்"என ஸ்ரீபிள்ளை-லோகாச்சார்யர் தத்வத்ரயத்தில் கூறியுள்ளார்."உடன் மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்" என்று நம்மாழ்வார் அருளிச் செய்கிறார். சித், அசித் ஆகியவை ஈஸ்வரனுக்கு அப்ருதக் ஸித்த விசேஷணங்கள்.

श्रीभूमिनीलाधिपतिः चिदचित्तत्वनायकः।
समस्तशब्दवाच्यश्च विना स्वामी च हेतुना।
एवं वेदान्ततत्वज्ञैः वैकुण्ठपतिरीरितः॥
*"ஸ்ரீபூமிநீளாதிபதி: சிதசித் தத்வநாயக: I*
*ஸமஸ்தசப்தவாச்யச்ச வினா ஸ்வாமி ச ஹேதுனா II*
*ஏவம் வேதாந்ததத்வஞை:வைகுண்டபதிரீரித:"*என ஸ்ரீபிள்ளைலோகாசாரியர் ஸாதித்துள்ளார். ஸ்ரீதேவி,பூமிதேவி,நீளாதேவிகளுக்கு பதியாய்,சித்-அசித் என்ற தத்துவங்களுக்கு நாயகனாய், எல்லாச் சொற்களாலும் கூறப்படுபவனாய், ஹேது (காரணம்) இல்லாமலே எல்லாவற்றுக்கும் ஸ்வாமியாயிருப்பவன் என்று வேதாந்த தத்துவத்தை அறிந்தவர்களால் வைகுண்டபதியானவன் சொல்லப்பட்டான் என்பதே இதன் பொருள்.

**ஸ்ரீமந்நாராயணனே வேதங்களின் உள்பொருள்-ஆழ்வார்களின் வாக்கு**
*"நால்வேதக்கடலமுதை மேலிருங்கற்பகத்தை வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை*" என்று பெரியாழ்வார் ஸாதித்துள்ளார். *"மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே*" என நம்மாழ்வார் பகவானை வேதத்தின் உள்பொருளாக அருளியுள்ளார். *"அளவரிய வேதத்தான் வேங்கடத்தான்"* என்று பூதத்தாழ்வாரும், *"நாற்பால வேதத்தான் வேங்கடத்தான்*" என்றும், *"செவிதெரியா நாகத்தான் நால்வேதத்துள்ளான்*" என்றும்," *உளனாய நான்மறையின் உட்பொருளை உள்ளத்துளனாக"* என்றும் பேயாழ்வாரும் அருளியுள்ளார்கள். "*பண்டாய வேதங்கள் நான்கும் ஐந்து வேள்விகளும் கேள்வியோடு அங்கமாறும் கண்டானை"*என்றும் "*விண்ணும் மழையும் வேதமும் வேள்வியுமானான்*" என்றும், "*வேதமுதல்வன் விளங்கு புரிநூலன்*" என்றும், "*வேதமும் வேள்வியும் விண்ணும் இருசுடரும் ஆதியுமானான்*" என்றும் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் சாதித்துள்ளார்.
ஸ்ரீமன் நாராயணனே எங்கும் வ்யாபித்துள்ள பரம்பொருள் என்பதை அவர் "*பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்பதங்களும் பதங்களின் பொருளும் பிண்டமாய் விரிந்த பிறங்கொளியனலும் பெருகிய புனலோடு நிலனும்*

*கொண்டல் மாருதமும் குரைகடலேழும் ஏழுமாமலைகளும் விசும்பும்*
*அண்டமும் தானாய் நின்ற எம்பெருமான் அரங்கமாநகரமர்ந்தானே" என*
தெளிவுற சாதித்துள்ளார்.
*"உலகு தன்னை நீ படைத்தி உள்ளொடுக்கி வைத்து மீண்டு*
*உலகு தன்னுளே பிறத்தி ஓரிடத்தை அல்லையால்*
*உலகு நின்னோடு ஒன்றிநிற்க வேறுநிற்றி ஆதலால்*
*உலகில் நின்னை உள்ள சூழல் யாவர் உள்ள வல்லரே?"என பகவானைப்*
பற்றி திருமழிசையாழ்வார் பாடியுள்ளார். "பறவையேறு பரம்புருடா !நீ என்னைக் கைக்கொண்டபின் பிறவியென்னும் கடலும் வற்றிப் பெரும்பதம் ஆகின்றதால்" என்பது பகவானின் மோக்ஷமளிக்கும் தன்மையை கூறும் பெரியாழ்வாரின் வாக்கு.

**ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம் எனும் உபநிஷத் வாக்கியங்கள்**

ஸ்ரீமந் நாராயணனைப் பற்றி தைத்திரீய உபநிஷத்தில்
**"सहस्रशीर्षमं देवं विश्वाक्षम विश्वशम्भुवं**
विश्वं नारायणं देवमक्षरं परमम् प्रभुम्" என சொல்லப்பட்டுள்ளது.
*"ஸஹஸ்ரஶீர்ஷம் தேவம் விச்வாக்ஷம் விச்வஶம்புவம்*
*விஶ்வம் நாராயணம் தேவமக்ஷரம் பரமம் பிரபும்"*-பல ஆயிரம் தலைகளை உடையவனும்,ஒளியுடன் விளங்குபவனும்.எங்கும் கண்களை உடையவனும், உலகங்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்பவனும், குற்றங்கள் ஏதும் இல்லாதவனும், அழிவில்லாதவனும், எல்லாவற்றையும் ஆளும் ஸ்வாமியுமாயும் உள்ளவன் நாராயணன் என்பதே இதன் பொருள்.

**विश्वतःपरमन्नित्यं विश्वं नारायणं हरिम**
**विश्वमेवेदं पुरुषस तत्विश्वमुपजीवति**
**पतिम विश्वस्यात्मेश्वरम शाश्वतं शिवमच्युतम**
**नारायणं महाज्ञेयम विश्वात्मानं परायणं"**
*"விஶ்வத: பரமந்நித்யம் விஶ்வம் நாராயணம் ஹரிம்*
*விஶ்வமேவேதம் புருஷம் தத்விஶ்வமுபஜீவதி*
*பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம் ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்*
*நாராயணம் மஹாஜ்ஞேயம் விஶ்வாத்மானம் பராயணம்"*
எல்லாவற்றையும் விட மேலானவனும்,எல்லாக்காலத்திலும் உள்ளவனும் எல்லாமாயிருப்பவனும் நாராயணனாகிற ஹரியே. உலகுக்கெல்லாம் இவனே புருஷனாகையால் இந்த ஜகத் ஜீவிக்கிறது.ஸகலஆத்மாக்களுக்-கும் ஸ்வாமியாயும்,பிறப்பிறப்பு அற்றவனும், மிகமங்களகரமானவனும், தன்னை அடைந்தவர்களை நழுவவிடாதவனுமாய், நாமனைவரும் அறிய வேண்டியவனுமாய், மேலான உபாயமுமாய் இருப்பவன் நாராயணனே.

नारायण परं ब्रह्म तत्वं नारायणः परः
नारायण परोज्योतिः आत्मा नारायणःपरः
यच्चकिंचित जगत्यस्मिन धृश्यते श्रूयतेपिवा
अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणस्स्थितः
*"நாராயணம் பரம் பிரஹ்ம தத்வம் நாராயண: பர:*

*நாராயண பரோஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:*
*யச்சகின்சித் ஜகத்யஸ்மின் த்ருSயதே ஷ்ருயதேபிவா*
*அந்தர்பஹிSச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித:"*
நாராயணனே மேலான ப்ரஹ்மம். அவனே மிக உயர்ந்த தத்வம். அவனே பரஞ்ஜோதி. அவனே பரமாத்மா. இவ்வுலகில் காண்பனவும், கேட்பனவுமாகிற எல்லாவற்றையும், உள்ளும் புறமும் ஒக்க வ்யாபித்திருப்பவன் அவனே.
ऋतं सत्यम परम ब्रह्म पुरुषं कृष्णपिङ्गलम
ऊर्द्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वै नमः
*"ருதம் சத்யம் பரம் ப்ரஹ்ம புருஷம் கிருஷ்ணபிங்களம்*
*ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஶ்வரூபாய வை நம:"*
எங்கும் பரந்துள்ளவனும், எப்போதும் நிலைத்திருப்பவனும், தன்னை அடைந்தவரை ரக்ஷிப்பவனும், புருஷன் (புருஷோத்தமன்) என்ற பெயருடையவனும், கருமை, மஞ்சள் நிறம் கலந்தவனும், உயர்ந்த வீரியத்தை உடையவனும், உலகையெல்லாம் தன் உருவமாகக் கொண்டவனுமான பரமாத்மாவை வணங்குகிறேன் என்பதே இதன்பொருள்.

ततः परं ब्रह्म परं ब्रुहन्तम यथानिकायम सर्वभूतेशु गूढं।
विश्वस्यैकं परिवेष्टितार- मीशं तं ज्ञात्वाऽमृता भवन्ति॥
वेदाहमेतं पुरुषं महान्तमादित्यवर्णं तमसः परस्तात।
तमेव विदित्वा तिमृत्युमेति नान्यः पन्त विद्दातेऽयनाय ॥ (ஸ்வேதஸ்வர உபநிஷத்)
*"தத: பரம் பிரஹ்ம பரம் ப்ருஹந்தம் யதாநிகாயம் ஸர்வபூதேஷு கூதம்*
*விஶ்வஸ்யைகம் பரிவேஷ்டிதார-மீஶம் தம் ஜ்ஞாத்வாSம்ருதா பவந்தி*
*வேதாஹமேதம் புருஷம் மஹாந்தமாதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்*
*தமேவ விதித்வா நிம்ருத்யுமேதி நான்ய: பந்த வித்தாதேயனாய"*
பரமாத்மா எல்லாவற்றையும் விட உயர்ந்தவன். எல்லா ஜீவன்களிலும் மறைந்துள்ளான். எங்கும் வ்யாபித்துள்ள அவனை அறிவதன் மூலமே ஜீவாத்மாக்கள் அழிவற்றவர்களாகிறார்கள். அந்த பரமபுருஷனை அறிவதன் மூலமே மறுபிறவியை தவிர்ப்பர். இதைத்தவிர வேறு மார்க்கமில்லை

ஹேய பிரத்யநீக அனந்த கல்யாண குண விஷிஷ்டனாய் ,
ஸர்வாவஸ்தையிலும் லக்ஷ்மி விஸிஷ்டனாய், ஸர்வேஸ்வரன் என்றும், புருஷோத்தமன் என்றும் ஸ்ருதிகளால் சொல்லப்பட்டவனுமான ஶ்ரீமந் நாராயணன் தான் பரதத்வம், ஸத்யம்.
அவனது மேன்மையான தன்மைகளாவன
அநந்தத்வம் – (அளவிடமுடியாத தன்மை)
ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபத்வம்
நிகிலஹேயப்ரத்யநீகத்வம்
(எல்லா தாழ்ச்சிகளுக்கும் எதிர் தட்டாயிருக்கும் தன்மை)
கல்யாண குண பூஷிதத்வம்
நிகில ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹ்ருதி கர்த்ருத்வம்
(அனைத்து உலகங்களையும் படைத்து காத்து அழித்தல்)
ஸகலாதிகாரி ஸமாஸ்ரயணீயத்வம்

(எல்லோர்க்கும் எளிதில் கிட்டும் தன்மை)
ஸமஸ்த புருஷார்த்த பரதத்வம்
(எல்லாப் பலன்களையும் கொடுக்கும் தன்மை)
அகில ஹேய பிரத்யநீகத்வம்- (இருளை சூரிய கிரணங்கள் நீக்குவது போலவும்,விஷமுடைய பாம்புகளை கருடன் விரட்டுவது போலவும்,சகல சேதனாசேதனங்களின் துக்கத்தையும், அவித்யையும் போக்கும் தன்மை)
ஶ்ரீ பூமி நீளா நாயகத்வம்
விபுவாக உள்ள தன்மை (எங்கும் பரந்துள்ளவன்)

***மேற்பட்டவற்றை குறிக்கும் ஸ்ருதிகளின் சில வாக்கியங்கள்***

"अन्तर्बहिश्च तत्सर्व"(அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம்),"पुरुष एवेदं सर्व"(புருஷ ஏவேதம் ஸர்வம்) , "तानि सर्वाणि तद्वपुः"(தாநி ஸர்வாணி தத்வபுঃ),"आनन्दमयः" (ஆனந்தமயঃ),"विज्ञानं ब्रह्म"(விஞ்ஞானம் பிரஹ்ம),"निर्दोषाश्च"(நிர்தோஷாஶ்ச), "रसो वै सः" (ரஸோ வை ஸঃ),"अपहतपाप्मा दिव्यो देव एको नारायणः"(அபஹத-பாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயணঃ),"तत्सर्वं व्याप्यनारायणः"(தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணঃ), "पूः प्राणिन सर्वग्रुहशयस्य"(பூঃ ப்ராணின் ஸர்வ க்ருஹஶ யஸ்ய), "नित्यो नित्यानां" (நித்யோ நித்யாநாம்),"न तत्समश्चाभ्यधिगश्च दृश्यते"(ந தத்ஸமஶ்யாப்யதிகஶ்ச த்ருஷ்யதே), "विद्धिल्लेकेव भास्वरः"(வித்தில்லேகேவ பாஸ்வரঃ) மின்னல் கீற்றுப்போல ஒளியுடைய திருமேனி.

"नित्यम विभुम् सर्वगतम सुसूक्ष्मं तदव्ययं यत्। भूतयोनिं परिपश्यन्ति धीराः॥" *(मुण्डकोप.)*
"நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் ததவ்யயம் யத்। பூதயோநிம் பரிபஶ்யந்தி தீராঃ" நித்யனாய்,விபுவாய், எங்கும் புகுகிற ஸூக்ஷ்மமான-வனாய், தான் வ்யாபித்திருக்கும் பொருள்களின் தோஷம் தன்னிடம் சேராதவனாய், பூதங்களுக்கு காரணமாய் இருக்கும் பரமாத்மாவை ஞானிகள் ஸாக்ஷாத்கரிக்கிறார்கள் என்பது இதன் பொருள்.

கடலிலுள்ள ரத்னங்கள் எப்படி எண்ணிலடங்காதவையோ, அப்படியே பரமாத்மாவினுடைய குணங்களும் எண்ணிலடங்காதவை என்கிறது வாமனபுராணம். यथा रत्नानि जलथेः असङ्ख्येयानि पुत्रक।
तथा गुणा ह्यनन्तस्याप्यसङ्ख्येया महात्मनः॥
(யதா ரத்னானி ஜலதே: அஸங்க்யேயாநி புத்ரக।
ததா குணா ஹ்யனந்தாஸ்யஸங்க்யேயா மஹாத்மந:॥

ஶ்ரீமந்நாராயணனின் மேன்மை குணங்களாக கொள்ளப்படுபவை ஆறு.
அவையாவன :-
வாத்ஸல்யம்- (இரக்க குணம்)
ஸௌசீல்யம்- (வேற்றுமையின்றி தோழமையுடன் கலப்பது)
ஸௌலப்யம்- (எளிமை)
ஸ்வாமித்வம்
ஞானம்
சக்தி –(ஆற்றல்)

ஸர்வேஸ்வரன், பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் என ஐந்து விதமான நிலைகளில் இருக்கிறான்.

**பர ரூபம்**: - ஸ்ரீ பூமி நீளா தேவி ஸமேதனாய் ஸ்ரீ வைகுண்டத்தில் நித்ய, முக்தர்களுக்கு போக்யனாக இருத்தல்.

**வ்யூஹ ரூபம்**- ஜகத் ஸ்ருஷ்டி,ஸ்திதி, ஸம்ஹாரங்களுக்கு ஸங்கர்ஷண, ப்ரத்யும்ந,அநிருத்த ரூபத்துடன் இருத்தல். ஞானம் பலம் ஸங்கர்ஷண ரூபத்திலும், ஐஸ்வர்யம், வீர்யம் ப்ரத்யும்ந ரூபத்திலும், பக்தி, தேஜஸ் அநிருத்த ரூபத்திலும் பரிமளிப்பதாக விஷ்வக்ஸேன ஸம்ஹிதையில் சொல்லப்பட்டுள்ளது.

**விபவ ரூபம்** - परित्राणाय साधूनां विनाशाय च दुश्कृताम । धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ।। ( பரித்ராணாய ஸாதூனாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் ।। தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே।।) என்று பகவானே சொன்னபடி ப்ரக்ருதியில் அவனது இச்சைப்படி அவதாரமெடுப்பது.

**அந்தர்யாமி ரூபம்** – சேதனாசேதனங்களுக்கு அந்தர்யாமியாக ஹ்ருதயத்தில் கலந்திருத்தல்.

**அர்ச்சாவதார ரூபம்_** ஸ்நான,போஜன, ஆஸன, ஸயநாதிகளை ஏற்று, திதி, வார, பக்ஷ, மாஸ, ருது, அயன, வருஷ உத்ஸவங்களால் பூஜிக்கப்பட்டு, விக்ரஹ வடிவில் எழுந்தருளியிருப்பது .

अर्चावतारः सर्वेषां बान्धवो भक्तवत्सलः (அர்ச்சாவதார: சர்வேஷாம் பாந்தவோ பக்தவத்சல:) என்றபடி பக்தர்கள் எல்லோர்க்கும், உறவாகவும், உடையவனாகவும் இருக்கும் தன்மை அர்ச்சாவதாரத்திலுள்ளது.

நமது ஸித்தாந்தத்தில்,ஜீவாத்மாவிற்கும்,பரமாத்மாவிற்கும் இடையே ஒன்பது விதமான உறவுகள் சொல்லப்படுகின்றன. அவையாவன

பிதா– புத்ர ஸம்பந்தம்

ரக்ஷக – ரக்ஷிய (Protector and Protected)

ஸேஷ– ஸேஷி

பர்தா– பார்யை

ஜ்ஞாதா– ஜ்ஞேய (Knower and Known)

ஆத்மா –சரீர

ஆதார –ஆதேய

ஸ்வாமி– சொத்து

போக்தா –போக்யம்

இது நமது ஸம்பிரதாயத்தின் தனிச் சிறப்பு

## சில விளக்கங்கள்

1. பரமாத்மா எவ்வாறு ஸர்வஶப்த வாச்யமாகிறான்?
2. சரீர ஆத்மபாவ சம்பந்தம் எப்படி சாத்தியம்?

இந்த இரண்டுக்குமான விளக்கங்கள் பின்வருமாறு

**1.ஸர்வ ஶப்த வாச்யமாவது எப்படி?**

"सदेव सोम्येदमग्रं आसीत"(ததேவ ஸோம்யேதமக்ரம் ஆஸீத்)ஸத் ஒன்றேதான் முதலில் இருந்தது என்றும், "तदैक्षत बहुभ्याम प्रजायेयेति"(ததைக்ஷத் பஹுப்யாம் ப்ரஜாயேயேதி) அது தான் பலவாக ஆக ஸங்கல்பித்தது என்றும்

ஸ்ருதிகள் சொல்கின்றன. "ब्रह्मवाइदमग्र आसीत" (பிரஹ்மவாயிதமக்ரம் ஆஸீத்) ப்ரஹ்மம் ஒன்றுதான் இருந்தது என்பதும், **"सत्मूलाभ्सोम्य"** (ஸத்மூலாப்ஸோம்ய) பிரஜைகளெல்லாம் ஸத்திலிருந்தே உண்டாயின என்பதும் ஸ்ருதி வாக்கியங்கள். சர்வவஸ்துக்களுக்கும் ஆத்மாவான பரப்ரஹ்மம் சில காலத்தில் அவிபக்தநாம ரூபமாய், பெயரும் உருவமும் பிரியாமல் இருக்கிறது. அப்பொழுது சித், அசித் ஆகியவை ஸூக்ஷ்மா-வஸ்தையில் (subtle state) இருக்கின்றன ஒன்றுகொன்று வித்யாசம் காணப்படாமல் ஸரீரசம்பந்தம் இல்லாமல் ஞானம் சித்தாய் சுருங்கிக் கிடக்கும். அதேபோல் அசித் அவ்யக்தமாய் (unevolved) இருக்கும்.

"तमः परे देवे एकी भवति "(தம: பரே தேவே ஏகீ பவதி) என்றபடி ஸ்வரூபம் தெரியாமல் சித் அசித் இரண்டும் விபக்தமாக இல்லாமல் பரமாத்மாவுடன் ஒன்றாய்க்கலந்திருந்ததால் பரமாத்மா ஒருவனே இருந்தான்.
"ब्रह्म एकेदमग्र आसीत। आत्मा वा इदमग्र आसीत। एकोहवै नारायण आसीत। एकामेवाद्वितीयम॥" (பிரஹ்ம ஏகேதமக்ர ஆஸீத் । ஆத்மா வா இதமக்ர ஆஸீத்। ஏகோஹவை நாராயண ஆஸீத் ।ஏகாமேவாத்விதீயம்) என்பது மேற்கூறிய கருத்து.

பிறகு பிரளயத்தின் முடிவில் சூக்ஷ்ம சிதசித் விசிஷ்டமான ப்ரஹ்மம், "ब्रह्मस्यम प्रजायेय"(பிரஹ்மஸ்யம் ப்ரஜாயேய)நான் அனேகமாகஆகிறேன் என்ற படியும், "हन्ता हमिपः तिस्रो  देवताः अनेन जीवेनात्मनानुप्रविष्य नामरूपे व्याकरवाणी" (ஹந்தா ஹமிப: த்ரிஸ்ரோ தேவதா அனேன ஜீவேனாத்மனானுப்ரவிஷ்ய நாமரூபே வ்யாகரவாணீ) என்றபடியும், என்னை ஆத்மாவாக உடைய ஜீவகோடிகளோடும், அசித் வஸ்துக்கள் யாவற்றையும் அநுப்ரவேசித்து, விசித்திரங்களான நாம ரூபங்களை அடைந்து, விசித்திர, நாநாவித, ஸ்தாவர, ஜங்கம ரூபமான ஜகத்தாய் ஆகிறேன் என்ற படியும், ஸர்வவஸ்துவின் வடிவங்களையும் வ்யாபித்த பிறகு, ஒவ்வொரு வஸ்துவின் பெயரும் பிரஹ்மத்தையே குறிக்கிறது.
"तत्सृष्ट्वा तदेवानुप्राविशत। तदनुप्रविश्य ।सच्च त्यच्चाभवत "( தத்ஸ்ருஷ்ட்வா ததேவானுப்ராவிஶத்। ததனுப்ரவிஶ்ய ।ஸச்ச த்யச்சாபவத்) என்ற உபநிஷத் வாக்கியங்கள் இதையே சொல்கின்றன. இதனால் பிரஹ்மத்திறக்கு ஸர்வ *ஶப்தவாச்யத்வம் (எல்லாப்பதங்களும் பொருளாகும் தன்மை)* ஏற்படுகிறது. இதுவும் நமது சித்தாந்தத்திற்கு மட்டுமே இசைந்த அர்த்தம். நாம் காண்கிற இந்த ஜகத்திற்கு, ஸ்தூலமான சேதனாசேதனங்களோடு கூடியபிரஹ்மத்திற்க்கு சூக்ஷ்மமான சேதனாசேதனங்களோடு கூடிய பிரஹ்மமே காரணம் என்பது தெளிவாகிறது. தனக்குள் பெயர் உருவமில்லாமல் அடங்கியிருக்கும் அநேக வஸ்துக்களை, பெயர் உருவங்களோடு வெளிப்படுத்துவதே ஸ்ருஷ்டியாகும்.

**2. சரீராத்மபாவ ஸம்பந்தம்**

மஹாபாரதத்திலும், ஸஹஸ்ரநாமத்தின் ஆரம்பத்திலும் "त्रिभुवनवपुषं विष्णुमीषम नमामि (த்ருபுவனவபுஷம் விஷ்ணுமீஷம் நமாமி)மூன்று லோகங்களையும் சரீரமாயுடைய விஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன் என்றபடியும், **य पृथिव्यां तिष्टन यस्य पृथिवी शरीरं** (ய ப்ருதிவ்யாம் திஷ்டன் யஸ்ய ப்ருத்வி சரீரம்)

எவனுக்கு பூமி சரீரமோ என்றபடியும், ஸ்ரீராமாயணத்தில்" **जगत्सर्वे शरीरं ते"** (ஜகத்ஸர்வே சரீரம் தே)என்றபடியும், **तानिसर्वाणि तद्वपुः**(தானி ஸர்வாணி தத்வபு:) என்றபடியும் அவைகள் எல்லாம் அவன் சரீரம் என்றபடியும், பரமாத்மா சேதனா சேதனங்களுக்கு சரீரமாகிறான்.

இங்கு சரீரம் என்பது கர்ம, பல, போக, ஸுக, துக்க சாதனமாயும், இந்திரியாச்ரமாயும், பூதங்களின் சேர்க்கையாயும் உள்ள உடலைக் குறிக்காது. அது பகவானுக்கு கிடையாது. "न भूत संघस्स्यानो देहीस्य परमात्मन" (ந பூத சங்கஸ்ஸ்யானோ தேஹீஸ்ய பரமாத்மன்) என்றபடி அவனது சரீரம் பூதங்களின் சேர்க்கையால் ஏற்பட்டதல்ல."இச்சா க்ருஹீத அபிமத உருதேஹ" என்றபடி தன் இச்சையாலேயே தன்னை ஸ்ருஷ்டித்துக்கொண்டு, சேதனாசேதனங்களின் ஸ்ருஷ்டி ஸ்திதிகளுக்கும் அவனைப்பற்ற நியமேன (எப்பொழுதும்) தார்யமுமாய், நியாம்யமுமாய், ஸேஷமுமான த்ரவ்யமாயிருப்பதையே, இந்த வார்த்தை குறிக்கிறது. ஈஸ்வரன் தன்னைத்தவிர மற்ற த்ரவ்யங்களுக்கு அவயவஹிதமாக (நேராக) ஸ்வரூபத்தால் ஆதாரமாயிருக்கிறான் என்பதே பொருள்.

அவ்வோத்ரவ்யங்களை பற்ற ஆச்ரயித்திருக்கும் குணாதிகளுக்கு,அவ்வோ-த்ரவ்யமுகமாக ஆதாரமாயிருக்கிறான்.சர்வ வஸ்துக்களுடையவும் ஸத்தை ஈஸ்வர ஸங்கல்பாதீனையாகையாவது, அநித்யங்கள் அநித்யேச்சையாலே உத்பன்னங்களாயும், நித்யங்கள் நித்யேச்சையாலே ஸித்தங்களாயுமிருக்கை. இவ்விதம் லக்ஷணம் சொல்லில், சேதனா சேதனங்களுக்கு பரமாத்மா சரீரம் என்பது விளங்கும்.

## முமுக்ஷுவின் உபாயம்
## மூன்று முக்கிய ரஹஸ்யங்கள்

புண்ணிய பவ கர்மங்களினால் ஏற்பட்ட இந்த சரீர ஸம்பந்தத்தை விட்டு நித்யானந்தம் அநுபவிக்க,அந்த பரமாத்வான ஸ்ரீமந்நாராயணனை அடைந்து அவனுக்கு ஸதாகாலமும் கைங்கர்யம் பண்ணவைக்கும், மோக்ஷத்தில் ஆசையுடைய ஜீவாத்மாவே முமுக்ஷு எனப்படுகிறான்.
இப்படி பகவானை அடைவதற்கான உபாயங்களாக ஸ்ருதிகளிலும், புராணங்களிலும் கர்மயோகம்,ஞானயோகம்,பக்தியோகம் என பலவழிகள் சொல்லப்பட்டுள்ளன. மனதை ஒருமைப்படுத்தி, இந்திரியங்களை கட்டுப் படுத்தி, சதா காலமும் செய்ய வேண்டிய கடினமான மார்க்கங்கள் இவை. கலியுகத்தில் ஜீவாத்மாக்கள் இவற்றை செய்யும் நிலையில் இல்லை.

நம்மை ரக்ஷிக்கும் தன்மை நமக்கில்லை.மோக்ஷத்திற்காக நாம் செய்ய வேண்டியது ஸ்ரீமந்நாராயணனின் பாதங்களை சரணடைந்து,அவன் ரக்ஷித்து மோக்ஷமளிப்பான் என்ற மன உறுதியுடன் இருக்கவேண்டும்.ஆத்மாக்களை உய்விப்பதையே உள்ளத்தில் கொண்ட ஸர்வேஸ்வரன் கர்ம, ஞான, பக்தியோக மார்க்கங்களுக்கு மாற்றாக, அவற்றின் ஸாரமானதும், எளிமையானதுமான மூன்று ரஹஸ்யங்களை வெளியிட்டான். அவை **திருமந்த்ரம்** – (அஷ்டாக்ஷரம்) பகவான் தனது அம்சமான நரனுக்கு

பத்ரிகாஸ்ரமத்தில் வெளியிட்டது.

**த்வயம்** (மந்த்ர ரத்னம்) –பகவான் தனது மகிஷியான பெரிய பிராட்டிக்கு ஸ்ரீ விஷ்ணு லோகத்தில் அருளியது.

**சரமஸ்லோகம்** (அந்திம உபாயம்)– பகவானாகிய கண்ணன் அர்ஜுனனுக்கு பாரதப் போரில் அருளியது.

ஆக, இம்மூன்று ரஹஸ்யங்களில் மனம் லயித்து, பகவானை சரணடையும் உபாயமாக அநுஸந்தித்தால்,எல்லா ஆத்மாக்களும் பகவானை அடையலாம் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. இந்த ரஹஸ்யங்களின் சுருக்கமான அர்த்தத்தை அனுபவிப்போம்.

## திருமந்த்ரம்

## ஓம் நம: நாராயணாய

மூன்று ரஹஸ்யங்களில்,இது பிரதமரஹஸ்யமாகும்.அநந்யார்ஹ சேஷத்வம் (பிறர்க்கு உரியனாகாமை), அநந்ய சரணத்வம் (பிறரை புகலாகப் பற்றாமை), அநந்ய போக்யத்வம் (வேறு எதுவும் இன்பத்திற்க்கு ஆளாகாமை ) ஆகிய மூன்றையும் இம் மந்திரம் விவரிக்கிறது. ஆத்மாவின் ஸ்வரூபத்தை விளக்குகிறது. இம்மந்திரத்தை( ஓம் நம:), ( நாராயணாய) என்று இரண்டாகப் பிரித்தால், ஆத்மாவின் ஸ்வரூபம்- சேஷத்வம், பாரதந்த்ரியம் (ஈஸ்வரனது விருப்பப்படியே வாழ்வது) என்பது தேறும். (ஓம்),( நம:), (நாராயணாய) என்று மூன்றாகப் பிரித்தால், சேஷத்வம்,அவனே உபாயமென்றிருத்தல், அவனுக்கே அடிமை செய்வது (பலன்) என மூன்றும் விளங்கும்.ஓம் இதி ஏகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி என்றவாறு ஒன்று, இரண்டு, ஐந்து ஆக மொத்தம் எட்டு எழுத்துக்கள் இருப்பதால் இது அஷ்ட அக்ஷரமாகிறது. மூன்று பதங்களும் மூன்று அர்த்தங்களை தெரிவிக்கிறது.

முதல் பதம் "**ஓம்**" என்ற பிரணவம். ரிக் வேதத்திலிருந்து "பூ:" என்றும், யஜுர் வேதத்திலிருந்து "புவ:" என்றும், ஸாம வேதத்திலிருந்து "சுவ:" என்றும், சொற்களை பகவான் தோற்று வித்தான். இவற்றை ஓடவைத்து இவற் றிலிருந்து அகாரம்,உகாரம்,மகாரம்,இவை அடைவே தோன்றச் செய்தான். எனவே இம்மூன்றின் சேர்க்கையான பிரணவம் வேதங்களின் ஸாரமாகும்.

இதில் அகாரம் வெளியிடும் பொருள்கள் இரண்டு – எம்பெருமானே எல்லாவற்றிற்கும் காரணம்,அவனே யாவரையும் காப்பவன் என்பன. இதில் ஆய(அ–வின் பொருட்டு) என்ற சதுர்த்தி ஏறிக் கழிந்துள்ளது.ஆகவே "அ"காரத்திற்கு "பகவானின் பொருட்டு"என்றே பொருள் கொள்ளவேண்டும். இருபத்தைந்தாம் எழுத்தான "ம"காரம் அறிவுள்ள ஆத்மாவை குறிக்கிறது. நடு எழுத்தான "உ"காரம் குறிப்பது நாம் நாராயணனுக்**கே** சேஷ பூதர் என்பதாகும். அவனுக்கே (ஏவ) என்பதால் வேறொருவருக்குமல்லன் என தெளிவாகிறது. ஆக பிரணவம் ஜீவ– பர ஸம்பந்தத்தைச்சொல்கிறது.

**"நம:**"என்ற இரண்டாம் பதத்தில், "ம:"என்ற ஆறாம் வேற்றுமை சொல்லின் பொருள்" எனக்கு உரியேன்"."ந" என்பது இதை இல்லை என்று மறுக்கிறது. ஆக,"நாம் நமக்கே"என்ற எண்ணம் கொடியது.பகவானுக்கே உரியவன் என எண்ணவேண்டும்."யானே நீ;என் உடைமையும் நீயே" என்றார் நம்மாழ்வார்.

"ஓம்" ஆத்ம ஸ்வரூபத்தையும், "நம:" என்ற பதம் ஈஸ்வரனே உபாயம் என்பதையும், நமக்கு நாமும் இல்லை பிறரும் இல்லை என்பதையும் சொல்லி  நமது அஹங்கார மமகாரங்களைத் தவிர்க்கிறது. அடுத்ததாக **"நாராயணாய"** என்பதன் சிறப்பை அறிவோம்.

**நாராணாம் அயநம் ய: ஸ:** (நாரங்களுக்கு உறைவிடம்) என்றும், **நாரா: அயநம் யஸ்ய ஸ:**–நாராயண: (நாரங்களை தனக்கு இருப்பிடமாக விளங்குபவன் நாராயணன்) என இருவகையிலே பொருள் கொள்ளலாம். "ர" என்பது அழியும் வஸ்துவை குறிக்கும்." நர" என்பது இதற்கு எதிர் பொருளான அழிவில்லாத்தன்மையை காட்டும். அதாவது நித்யமான வஸ்து. "நாரா" என்பது பன்மை.

"அயனம்" என்ற சொல் உறைவாக (உறையுமிடமாக உள்ளதை)குறிக்கிறது. நாராணாம் அயனம்– நாரா: அயநம் யஸ்ய ஸ:–நாராயண–இவன் சேதன அசேதனங்களால் அடையப்பெறுகிறான் (ப்ராபகம்). இவனிடம் நாம் உறைவதால் இவனே (ப்ராப்யம்) உபேயமுமாவான்.நாராயணன் என்ற பெயர் நாராயணான தெய்வத்தைத் தவிர யாரையும் குறிக்காது.இந்தத் திருநாமத்தால் தேறுவது பரத்வமும், சௌலப்யமும் ஆகும்.

"ஆய"என்ற பதத்தால் ஸ்ரீமந்நாராயணனுக்கே எல்லாவகையான (அடிமை) கைங்கர்யங்களும் செய்ய விரும்புவதை தெரிவிக்கிறது." ஸதா பஸ்யந்தி" என்றபடியும், "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி" என்ற படியும், ஸர்வகால,ஸர்வதேச,ஸர்வாவஸ்தைகளிலும்,ஆத்மாவின் இயல்புக்கேற்ற புருஷார்த்தமான பகவானுக்கு செய்யும் கைங்கர்யம் இடையறாமல் நடக்க வேண்டும்,என்பதே ஆத்மாவின் பிரார்த்தனை. இந்த மூன்றாவது பதம் ப்ராப்தியை (பலனை) குறிக்கிறது.

"எம்பெருமானுக்கே உரியேனான நான், எனக்கு உரியவனன்றிக்கேயொழிய வேணும்.ஸர்வ சேஷியான நாராயணனுக்கே எல்லாவடிமைகளும் செய்யப்பெறுவேனாக வேணுமென்றதாயிற்று" என்பது  திருமந்த்ரத்தை பற்றி முமுக்ஷுப்படியில் ஸ்ரீ பிள்ளைலோகாச்சசாரியரின் அற்புதமான வாக்கு .

**த்வயம்**

**ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே**

**ஸ்ரீமதே நாராயணாய நம:**

இந்த ரஹஸ்யத்தை மேலே சொல்லப்பட்ட திருமந்த்ரத்தின் விவரணமாக கொள்ள வேண்டும்.திருமந்த்ரம், த்வயம் ஆகிவற்றின் பொருளை அவரவர் ஆசார்யரை அணுகி,அறிந்து,அதன்படி ஒழுகுவது ஸ்ரீவைஷ்ணவ மரபாகும்.

மற்ற இரு ரஹஸ்யங்களைபோலல்லாமல்,பிராட்டியாரின் ஸம்பந்தம் (புருஷகாரம்) நேரிடையாக இரு கூற்றுகளிலும் உள்ளது. எம்பெருமானின் திருவடிகளைப் பற்றியும்  சொல்லப்பட்டுள்ளது. இது த்வயத்தின் தனிச்

சிறப்பாகும்.த்வயத்தின் முதற்கூற்றால் உபாயமும்,இரண்டாவது கூற்றால் கைங்கர்ய ப்ராப்தியும் சொல்லப்படுகின்றன

"முதற்கூற்றால் பெரிய பிராட்டியை முன்னிட்டு எம்பெருமானது திருவடிகளை உபாயமாக பற்றுவது,பிற்கூற்றால் அச்சேர்த்தியில் அடிமை இரக்கிறது" என்பது முமூக்ஷுப்படியின்  வாக்யம்.

**முதற் கூற்று**–"ஸ்ரீ" என்பது பெரிய பிராட்டிக்கு திருநாமம். இது அவளது புருஷகாரத்தை விளக்கும் பதம். புருஷகாரம் என்பது சேதனனுக்கும் பகவானுக்கும் நடு நிலையில் நின்று, சேதனனுடைய அபராதங்களைப் பொறுத்தருளுமாறு பகவானிடம் மன்றாடி,அவர்களுக்கு அருள் விளைவிக்கப் பண்ணுவது.

நாராயண பதத்தால் பகவானின் குணங்களான வாத்ஸல்யத்தையும், ஸ்வாமித்வத்தையும், சௌலப்யத்தையும்,சௌசீல்யத்தையும், ஞானத்தையும் ,சக்தியையும் அறிகிறோம்.

"சரணௌ"(இரட்டை) என்ற பதம் திருவடிகளை குறிக்கிறது. வேறு உபாயங்களை அபேக்ஷிக்காமல் பற்றினவரை நழுவவிடாமல் ரக்ஷிக்கும் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

சரணம் என்ற அடுத்த பதம் உபாயத்தைக் குறிக்கிறது. "ப்ரபத்யே"என்ற பதத்தின் பொருள் "பற்றுகிறேன்" என்பது–மனத்தினால், சொல்லால், கருமத்தினால்.இவ்வாறு இந்த  முதற் கூற்று ஸித்தோபாயவரணமாகத் தேறுகிறது.

**இரண்டாவது கூற்று–**  ஸ்ரீய: பதியான ஈஸ்வரன் திருவடிகளில் நாம் பண்ணும் கைங்கர்யத்தைச் சொல்லுகிறது. பிராட்டியுடன் கூடிய பகவானின் திருவடிகளை சரணாகப்பற்றி அதன் பலனாக அவனை அடைந்து அவனுக்கு கைங்கர்யம் செய்வதே புருஷார்த்தம். ஆத்மாவின் ஸ்வரூபமாக,பகவானையே ப்ராப்யமாக(பெறவேண்டியவையாக) பற்றும்போது ஐஸ்வர்யத்தையும், கைவல்யத்தையும் விரும்பாமல் அடிமை செய்வதிலேயே, முழு நாட்டம் வேண்டும்.

**"உனக்கே நாம் ஆட்செய்வோம், மற்றை நங்காமங்கள் மாற்று**" என்று சூடிக்கொடுத்த நாச்சியார் சொல்லியபடியும், **"தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே"** என்று நம்மாழ்வார் சொல்லியபடியும், பகவானின் விருப்பம் ஒன்றாலேயே கைங்கர்ய ப்ராப்தி பெறவேண்டுமென்பதே இந்த ரஹஸ்யத்தின் சிறப்பாகும்.

**சரம ஶ்லோகம்**

***ஸர்வ தர்மாந்  பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।***

***அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: ॥***

(கீதை-18-66). இந்த ரஹஸ்யத்தின் அர்த்தத்தை அறிவதற்காகவே ஸ்ரீராமானுஜர் பதினெட்டு முறை திருக்கோட்டியூர் நம்பியிடம் நடந்து சென்று பிறகு எம்பெருமானார் ஆனார். இது பகவானே விபவாவதாரத்தில் அர்ஜுனனுக்கு அருளியது.

பகவானை உபாயமாக பற்றும் சேதனன் செய்ய வேண்டியதை (அதிகாரிக்ருத்யம்) முதல் பதம் சொல்லுகிறது. பகவான் அவனுக்கு செய்வதை (உபாயக்ருத்யம்) இரண்டாவது பகுதி தெரிவிக்கிறது

***முதல் பகுதி***

ஸர்வ தர்மாந் -உபாயமாகக் கருதும்  எல்லா தர்மங்களையும்

பரித்யஜ்ய-பரித்யாகம் செய்து விட்டுவிடுதல்

(கர்மங்கள் கைங்கர்யத்திலே புகுந்துவிடும்)

மாம்  -என்னை

ஏகம் - என்னை**யே**

சரணம் - சரணாக, அஹங்கார மமகாரங்களை விடுத்து

வ்ரஜ -உபாயமாக அடைவாய்

***இரண்டாம் பகுதி***

அஹம் - நான்

த்வா - (என்னை பற்றியிருக்கும்) உன்னை

ஸர்வ பாபேப்யோ - எல்லா பாபங்களிலிருந்தும்

(மோக்ஷம் அடைவதற்கான இடையூறுகளிலிருந்து)

மோக்ஷயிஷ்யாமி - முக்தனாகும்படி செய்யக் கடவேன்

மா சுச - கவலையை விடு (சோகம் தவிர்க்க)

நீ உன் காரியத்தில் முயற்சி கொண்டால் "என் செய்வேன்! எப்படி செய்வேன்!" என்று கலங்குவது இயல்பு. நானே உன் காரியத்தை மேற்கொள்கிறேன். என்று சொன்னபிறகு, "இவன் நமது காரியத்தில் அலக்ஷியமாக இருக்-கிறானோ" என நீ கலங்க வீண்டாம். உன்னை ஏற்றுக்கொண்டு ரக்ஷிப்பதில் நான் கண்ணும் கருத்துமாக இருப்பதால், நீ சோகிக்க காரணமே இல்லை. இதுவே இந்த ரஹஸ்யத்தின் சாரம்.

சகலசாஸ்த்ரங்கள் ஒருதலையுமாயும், இந்த ஸ்லோகம் ஒருதலையுமாயும் இருக்கிறது. கர்ம, ஞான, பக்தி யோகங்களையும் மீறி, ஸாஸ்த்ரங்கள் சொன்ன தர்மங்களை விடுத்து, என்னை தஞ்சமாகப்பற்றினால், சகல இடையூறுகளும் விலகும் என்று சொன்னதால், ஈஸ்வர ஸ்வாதந்த்ரியம் வெளிப்படுகிறது. இந்த கருத்து எளிதாயினும் இதில் பூரண விஸ்வாசம் வைத்து நடப்பது அரிது.

சேதனனுக்கு, சரீரபோகத்தில் மனம் செல்லாதவாறு இந்திரியங்களை வென்று, பகவானுக்கு பாரதந்த்ரியனாயிருக்கும் ஸ்வரூப ஞானம் பெறுவதற்க்காக கர்மானுஷ்டங்கள் விதிக்கப்பெற்றன.  ஸ்வரூப ஞானம் உண்டானபின் இந்த

உபாயங்களான தர்மங்களை விடுவதில் தோஷமில்லை என்பது கருத்து. பக்தி அரிய வழி .பிரபத்தி எளிய வழி .

பகவானிடம் பாரத்தை வைத்து அவனிடம் சரணடைந்தபின், ரக்ஷிப்பது அவனது குணமானதால், சேதனன் வேறெதுவும் செய்யத்தேவை இல்லை என்பதே அந்திமோபாயமான இந்த ரஹஸ்யத்தின் கருத்து.
மற்ற உபாயங்களை விட்டுவிட்டு, அவனையே உபாயமாக பற்ற வேண்டும். "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்" என்றபடியும்," ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி" என்றபடியும், பகவானுக்கு கைங்கர்யம் செய்வதையே குறிக்கோளாக பற்றவேண்டுமென்ற ஞானமே மோக்ஷத்திற்கு ஹேதுவாகிறது. இதுவே நமது ஸித்தாந்தத்தின் சிறந்த கருத்து. "சிற்றவேண்டா சிந்திப்பே அமையும்" என்பது ஆழ்வாரின் வாக்கு.

**அர்த்த பஞ்சகம்**

ஸ்ரீ பிளைலோகாசார்யரின் கூற்றுப்படி ஸம்சாரியான சேதனனுக்கு தத்வ ஞானம் பிறந்து, உஜ்ஜீவிக்கும் பொழுதில்,அர்த்த பஞ்சக ஞானமும் உண்டாக வேண்டும். இதுவே மோக்ஷத்திற்கு ஹேதுவாகிறது

*அர்த்தபஞ்சகமாவது*

ஸ்வஸ்வரூபம்
பரஸ்வரூபம்
புருஷார்த்த ஸ்வரூபம்
உபாய ஸ்வரூபம்
விரோதி ஸ்வரூபம்

இவற்றில், ஒவ்வொன்றிலும் ஐந்து உபவிஷயங்கள்(வகைகள்) உள்ளன.
ஆத்மஸ்வரூபம்- நித்யர், முக்தர், பத்தர், கேவர், முமுக்ஷு.
பரஸ்வரூபம்-பரத்வம்,வ்யூஹம்,விபவம்,அந்தர்யாமித்வம்,அர்ச்சாவதாரம்.
புருஷார்த்தம் -தர்ம, அர்த்த, காம, ஆத்மாநுபவ, பகவதநுபவம்.
உபாயம் -கர்ம, ஞான, பக்தியோகம், ப்ரபத்தி, ஆசார்யாபிமானம்
விரோதி ஸ்வரூபம் -ஸ்வரூப விரோதி, பரத்வ விரோதி, புருஷார்த்த விரோதி,உபாய விரோதி, ப்ராப்தி விரோதி.

இப்படி அர்த்த பஞ்சக ஞானம் பெற்ற முமுக்ஷு," யதந்ந புருஷோ பவதி ததந்நாஸ்தஸ்ய தேவதா" என்றபடி சகல பதார்த்தங்களையும் பகவத் விஷயத்திலே நிவேதித்து, ஆசார்யன் சந்நிதியிலே கிஞ்சித்காரத்தோடே அவனுககு அபிமதமாக வர்த்திக்கையும், ஈஸ்வரன் சந்நிதியிலே தன்னுடைய நீசத்வத்தை அநுசந்திக்கையும், ஸ்ரீ வைஷ்ணவ சந்நிதியிலே தன்னுடைய பாரதந்திரியத்தை அநுசந்திக்கையும், ஜ்ஞான அநுஷ்டானங்களோடே ஜீவிக்கும் சேதனன் மோக்ஷமடைந்து நிரதிசய ஆனந்தமடைவான் என்று ஸ்ரீ பிள்ளைலோகாசார்யர் ஸாதித்துள்ளார்

***முதற் பகுதி முற்றிற்று.***

## இரண்டாம் பகுதி
## திருவாய்மொழியே நமது ஸித்தாந்தம்

### திருவாய்மொழியின் சிறப்பு

ஶ்ருதிகள் எனப்படும் வேதங்களையும், உபநிஷத்துக்களையும் ஆதாரமாகக் கொண்டது நமது ஸித்தாந்தம்.இதன்சாரத்தை நமக்கு நம்மாழ்வார் வாயிலாக திருவாய்மொழியாக பகவான் அருளியதால், இதனை பகவத் விழயமாக கொள்கிறோம். "***வேதத்தை செந்தமிழால் விரித்து உரைத்தான்***" என்றும், "***ஸஹஸ்ர சாகோபநிஷத் ஸமாகமம்***" என்ற படியும், "***யாழினிசை*** வேதத்தியல்" என்றபடியும், "***உயர்வேதம் நேர்கொண்டுரைத்து***" என்ற படியும் திருவாய்மொழி ஸாம வேதத்தின் ஸாரமாக கொள்ளப்படுகிறது.

"***அருள்கொண்டாடும் அடியவரின்புற,அருளினான் அவ்வருமறையின் பொருள், அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்***" என்றும் "***மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி,என் நெஞ்சுள்*** நிறுத்தினான்"என மதுரகவியாழ்வார் திருவாய்மொழியை பற்றி பாடியுள்ளார். "***உண்டோ திருவாய்மொழிக்கொப்பு?***"என மாமுனிகள் ஸாதித்துள்ளார்.

"***மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர்நிலையும் தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்***" என்று பட்டர் திருவாய்மொழியில் அர்த்த பஞ்சகம் பற்றி விளக்கப்பட்டுள்ளதை தமது தனியனில் ஸாதித்துள்ளார். திருவாய்மொழி ஸித்தாந்தத்தை விளக்கும் தமிழ்மறையாக போற்றப்படுகிறது. நம்மாழ்வாரும் வகுள பூஷண பாஸ்கரனாக (அஜ்ஞானமாகிய இருளைப்போக்கும் சூரியனாக) கொண்டாடப்படுகிறார்.

நாம் அறிந்து கொள்ளவேண்டிய ஐந்து விஷயங்களான **அர்த்த பஞ்சகம்** திருவாய்மொழியில் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளதாக,நம்பிள்ளை தமது திருவாய்மொழி வ்யாக்கானத்தில் தெரிவித்துள்ளார்.திருவாய்மொழி ஸாகரம் போன்றது.ஆழ்ந்த உள்ளர்த்தங்கள் கொண்டது.பல ஆசார்யர்கள் வ்யாக்கானம் எழுதியுள்ளார்கள்.நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, அழகியமணவாள ஜீயர் ஆகியோர் திருவாய்மொழி வ்யாக்கானமாக முப்பத்தாறாயிரப்படி, இருபத்தினாலாயிரப்படி, பன்னிரண்டாயிரப்படி ஆகியவற்றை முறையே அருளியுள்ளனர்.அனைவரும் அவரவர் ஆசார்யரை அணுகி இந்த வ்யாக்கானங்களையும், அவற்றின் சிறப்பையும் உணரவேண்டும். இந்த அரியபொக்கிஷமாகிய திருவாய்மொழியை அனுபவித்து,அர்த்த பஞ்சக விளக்கமாக சொல்லப்பட்ட பாசுரங்களில் சிலவற்றையும் அவற்றின் அர்த்தத்தையும் பகிர்ந்து கொள்ளும் முயற்சியிலேயே,இதை எழுதியுள்ளேன்.

பத்து பாசுரங்கள் கொண்டது ஒரு திருவாய்மொழி எனப்படுகிறது.இவ்வாறாக நூறு திருவாய்மொழிகள் பத்து பகுதிகளாகவும்,ஒவ்வொன்றும் ஒரு பத்தாகவும் கொள்ளப்படுகிறது.அர்த்தபஞ்சகத்திலுள்ள ஒவ்வொரு விஷயமும் நான்கு திருவாய்மொழிகளில், 44 பாசுரங்களில் சொல்லப்பட்டுள்ளதாக பெரியோர்கள் சொல்வர்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த ***ஆசார்ய*** ஹ்ருதயத்தில் 211 வது சூத்திரத்தில் கூறியிருப்பது என்னவென்றால் *"மூன்றில் சுருக்கிய ஐந்தையும் உயர் திண்ணனை ஒன்று பயிலேறு கண் கருவீடு சொன்னால் ஒருக்கொண்ட நோற்ற நாலும் எம்மா ஒழிவில் நெடுவேய் என்கிற இருபதிலே விசிதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும் அருளினன் வீடு பெற்றவென்கையாலே ஐந்திலும் இரண்டையும் தொழுது களித்தேன் சொல்லுப் பெற்றேன் பணிசெய் என்கிற முக்தலக்ஷண வ்ருத்தியாலே இரண்டிலொன்றையும் இதுக்கு ப்ரமேயமென்னும்"*

அவர் திருவிருத்தமும், திருவாசிரியமும் சேர்ந்து திருமந்த்ரார்த்த விவரணமாகிறது என்றும்,பெரிய திருவந்தாதி சரம ஸ்லோகத்தை விவரிக்கிறது என்றும் கூறியுள்ளார். திருவாய்மொழியை த்வயார்த்த விவரணமென்றும், தீர்க்க சரணாகதி பிரபந்தம் என்றும் கூறுகிறார். திருவிருத்தம்,திருவாசிரியம்,பெரிய திருவந்தாதி ஆகியமூன்றில் சுருக்கமாக சொல்லப்பட்ட அர்த்த பஞ்சகத்தை, (5*4) இருபது திருவாய்மொழிகளில் ஆழ்வார் விரிவாகக் கூறியுள்ளார் என்பது இவரது கூற்று.

**பரஸ்வரூபம்-**உயர்வற உயர்நலம், திண்ணன்வீடு,அணைவதரவணை மேல், ஒன்றும்தேவும் ஆகிய நான்கு திருவாய்மொழிகள்.
**ஆத்ம ஸ்வரூபம்**- பயிலுஞ்சுடரொளி, ஏறாளுமிரையோன், கண்கள் சிவந்து, கருமாணிக்கம் ஆகியவை .
**உபாய ஸ்வரூபம்** -நோற்ற நோன்பு என்ற பதிகத்திலிருந்து நான்குபதிகங்கள்.
**விரோதி ஸ்வரூபம்-** வீடுமின் முற்றமும், சொன்னால் விரோதம், ஒருநாயகம், கொண்ட பெண்டிர் ஆகியவை .
**புருஷார்த்த ஸ்வரூபம்-** எம்மா வீட்டுத்திறமும், ஒழிவில் காலமெல்லாம், நெடுமாற்கடிமை, வேய்மருதோளிணை ஆகியவை .

இந்த இருபது பதிகங்களின் விரிவு,மற்ற 80 திருவாய்மொழிகளில் இருப்பதாக கூறியுள்ளார். "மயர்வற மதிநலம் அருளினன்" என்று தொடங்கி அருளாகிய **உபாயத்தைச்** சொல்லி,"அவாவற்று வீடுபெற்ற" என்று **உபேயத்தைச்** சொல்லி, தலைக்கட்டுகையாலே,அர்த்த பஞ்சகத்திலுள்ளும் பிரதானமானவை உபாய உபேயங்களே என்றும், இவையே திருவாய்மொழி ஆயிரத்துக்கும் பிரமேயம் என்றும் பெரியோர் சொல்லுவர்.
பரஸ்வரூபம் -(1-1),(2-2),(2-8) மற்றும் (4-10) ஆகிய திருவாய்மொழிகள்
ஆத்மஸ்வரூபம் - (3-7),(4-8),(6-8) மற்றும் (8-9)
விரோதி ஸ்வரூபம் - (1-2),(3-9),(4-1) மற்றும் (9-1)
உபாய ஸ்வரூபம் - (5-1), (5-7),(5-8) மற்றும் (5-9)
புருஷார்த்த ஸ்வரூபம் -(2-9), (3-3),(8-10) மற்றும் (10-3)
இந்த கருத்துக்கள், பல பாசுரங்களில் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்து இருப்பதால், திருவாய்மொழி முழுவதுமே நமது ஸித்தாந்தம் பரவியுள்ளது. ஆயினும் முமுக்ஷு அறியவேண்டியதான, அர்த்தபஞ்சக ஞானமான இவ்வைந்து விஷயங்களையும், ஒவ்வொன்றாக, சில பாசுரங்களையும் அவற்றின் அர்த்தத்தையும் மனதில் நிறுத்தி, அனுபவிப்போம்

## 1.பரஸ்வரூபம் -- பரமாத்மா

*(எம்பெருமானாகிய ஸ்ரீமந் நாராயணனின் நிலை)*

முதல் பத்தாகிய நூறு பாசுரங்களில் பரஸ்வரூபம் நன்கு விளக்கப்பட்டுள்ளது. முதல் திருவாய்மொழியில் ஸ்ரீமந் நாராயணனின் மேன்மையான நிலையும், ஸௌலப்ய குணம் மூன்றாவது திருவாய்மொழியிலும், பிழை பொறுக்கும் குணம் நான்காம் திருவாய்மொழியிலும்,சீலகுணம் ஐந்தாம் திருவாய் மொழியிலும், எளிதாக அராதிக்கத்தக்கவன் என்பதை ஆறாவது திருவாய் மொழியிலும், அவனைப்பற்றுவது மிக இனிதானது என்பதை ஏழாம் திருவாய் மொழியிலும் அனுபவிக்கலாம்.

அவனது பரத்வமும், திவ்யபூஷண, திவ்யாயுத, திவ்யாவயவ ஸௌந்தர்யங்களும், மோக்ஷமளிக்கும் தன்மையும்,இரண்டாம் பத்தாகிய நூறு பாசுரங்களில் விரிவாக சொல்லப்பட்டுள்ளது.

**எம்பெருமான் ஸர்வேஸவரனாயிருப்பது**

***"உயர்வற உயர்நலம் உடையவன் எவன் ? அவன்***
***மயர்வற மதிநலம் அருளினன் எவன்? அவன் "*** என்ற முதற் பாசுரத்தின் மூலம் ஸ்ரீமந்நாராயணன் உயர்வுகளுக்கெல்லாம் மேம்பட்ட உயர்வானவன் என்றும்,கல்யாண குணங்கள் உடையவன் என்றும் (ஸகுண ப்ரஹ்மம்) ஆழ்வார் தெரிவிக்கிறார்.

***"இனன் உணர் முழுநலம் எதிர்நிகழ் கழிவினும் இனன் இலன்***
***எனன் உயிர் மிகு நரை இலனே"(1-1-2)***என்ற பாட்டில் ஞானம், ஆனந்தம் இவற்றின் உருவாகவும், முக்காலங்களிலும் ஒப்பற்றவனும் ஆன அவனே எனது ஆத்மாவாகிறான் என்கிறார்.

எம்பெருமான் பரமபதம் தொடக்கமாய் எல்லா உலகங்களுக்கும் தலைவன். வீடு முதலிய பலன்களைத் தருபவன் என்பது உறுதி. பிரளய காலத்தில் எல்லாவற்றையும் தன் திருவயிற்றில் வைத்துக் காத்தவன் என்பதை

***"திண்ணன் வீடு முதல் முழுதும் ஆய்***
***எண்ணின் மீதியன் எம்பெருமான்***
***மண்ணும் விண்ணும் எல்லாம் உடன் உண்ட நம்***
***கண்ணன் கண் அல்லது இல்லை ஓர் கண்ணே"(2-1-1)***

என்ற பாசுரத்தில் சொல்லியுள்ளார்.

***"ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா ஒத்தாய் எப்பொருட்கும்***
***உயிராய்,என்னைபெற்ற அத்தாயாய் தந்தையாய் அறியாதன அறிவித்து***
(2-3-2)என அவனுக்கு ஒத்தாரும் உயர்ந்தாரும் இல்லாததை தெரிவிக்கிறார்.
***"மூவர் ஆகிய மூர்த்தியை,முதல் மூவர்க்கும் முதல்வன் தன்னை"***
***(3-6-2)*** என்றும்,"***பரவி வானவர் ஏத்த நின்ற பரமனை பரஞ்ஜோதியை"***
***(3-6-3)*** என்றும்***,"விழுவிய அமரர் முனிவர் விழுங்கும் கன்னல்***
***கனியினை"(3-6-7)*** என்றும் பலவிதமாக அவன் யாவர்க்கும் தலைவன் என்பதை சொல்கிறார்.

***"வெள்,ஏறன்,நான்முகன்,இந்திரன்,வானவர் புள் ஊர்தி கழல் பணிந்து ஏத்துவரே"(2-2-10)*** என்பதன் மூலம் சிவன், பிரமன், இந்திரன் ஆகிய அனைவரும் திருமாலைப் பணிந்து துதிப்பார்கள் என்கிறார். ***"வீற்றிருந்து ஏழுலகம் தனிக்கோல் செல்ல வீவு இல் சீர்"(4-5-1)*** என்பதும் இதையே சொல்கிறது.

***"பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாதது,ஓர் கணக்கு இல் கீர்த்தி வெள்ளக்கதிர் ஞானமூர்த்தியினாய் "(6-2-8)***
உலகை நீக்கும்காலத்தில்,நீ சேதனாசேதனங்களை சேர்க்கிறாய். படைக்கும் பொழுது அவரவர் வினைகளுக்கு ஏற்ப தனித்தனி பிறவிகளை கொடுக்கிறாய் என எம்பெருமானே பிறப்பிறப்புக்கு காரணமென்பதை தெரிவிக்கிறார்.

***"தானே உலகு எல்லாம் தானே படைத்து இடந்து***
***தானே உண்டு உமிழ்ந்து தானே ஆள்வானே "(10-5-3)***
உலகங்களை படைத்து பிரளயத்தில் எடுத்து, காத்து, உண்டு, உமிழ்ந்து நிலைப்படுத்தியவன், எல்லாவற்றினுள்ளும் உயிராக இருந்து ரக்ஷித்து இயக்கும் அவனே இறைவனாய் ஆள்கிறான் என்கிறார்.

***"ஓடி ஓடிப் பல பிறப்பும் பிறந்து மற்று ஓர் தெய்வம்***
***பாடி ஆடிப் பணிந்து பல் படிகால் வழி ஏறிக் கண்டீர் ______***
***___ ஆடு புள்கொடி ஆதி மூர்த்திக்கு அடிமை புகுவதுவே"(4-10-7)*** என்ற பாசுரத்தில் நாராயணனை விட்டு மற்ற தெய்வங்களை வணங்கி பாடி திரிந்த பலனால் பலபிறவிகள் எடுத்தீர்கள். இதை தெரிந்து கொண்டு அவனுக்கு அடிமையாவதே தக்கது என்கிறார்.

**எம்பெருமான் எங்கும் வ்யாபித்திருப்பது**

***"திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசைப்***
***படர்பொருள் முழுவதுமாய் அவை அவை தொறும்***
***உடல் மிசை உயிரென கரந்து எங்கும் பரந்துளன்***
***சுடர் மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே"(1-1-7)*** என்பதன் மூலமும்
***" பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்***
***பரந்த அண்டம் இது என நிலம் விசும்பு ஒழிவு அற***
***கரந்த சில் இடந்தொறும் இடம் திகழ் பொருள் தொறும்***
***கரந்து எங்கும் பரந்துளன்" (1-1-10***) என்பதன் மூலமும் எம்பெருமான் எல்லா வஸ்துக்களையும் வ்யாதிப்பிருப்பதை தெரிவிக்கிறார்.

***"அமைவுடைஅமரரும் யாவையும் யாவரும் தானாம் அமைவு உடை நாரணன்"(1-3-3)*** என்றபடி இயங்காப்பொருள்களையும், இயங்கும் உயிர் களையும் தன்பகுதிகளாக உடையவனே நாராயணன் என ஸரீராத்மபாவ சம்பந்தத்தை தெரிவிக்கிறார். ***"ஏறனை பூவனை பூமகள் தன்னை வேறு இன்றி விண் தொழத் தன்னுள் வைத்து"(2-2-3)*** என்பதும்,***"யாவரும் யாவையும் எல்லாப்பொருளும் கவர்வு இன்றித் தன்னுள் ஒடுங்க நின்ற" (2-2-6)*** என்பதும் இதே கருத்தை தெரிவிக்கிறது.
***"இவையும் அவையும் உவையும், இவரும் அவரும் உவரும்***

***எவையும் எவரும் தன்னுள்ளே ஆகியும் ஆக்கியும் காக்கும் அவையுள் தனி முதல் எம்மான் .......*** *"(1–9–1)* என்பதன்படி மூவகையான அறிவற்ற அசேதனங்களையும்,மூவகை சேதனர்களையும் தன்னுள் அடக்கி உள்ளான். தானென்று கூறும்படி கலந்துள்ளான்.இவற்றை ஆக்கியும், காப்பாற்றியும், உள்ளேநின்று நியமித்தும்,முழுமுதலாக(தனித்தன்மையுடன்) உள்ளான் என்கிறார்.

***"புகழும் நல் ஒருவன் என்கோ? பொரு இல் சீர்ப் பூமி என்கோ?***
***திகழும் தண் பறவை என்கோ? தீ என்கோ? வாயு என்கோ?***
***நிகழும் ஆகாசம் என்கோ? நீர் சுடர் இரண்டுமென்கோ?***
***இகழ்வு இல் இவ்வனைத்தும் என்கோ?"(3–4–1)*** என்றபடி உலகப் பொருள்களை தன் ஸரீரமாகக்கொண்டு வேத, இதிஹாச புராணங்களால் புகழப்பட்ட உன்னை என்னவென்பேன்?பூமி,கடல்,காற்று,ஆகாசம்,ஒலி இவை எல்லாமே நீதானே! என அவனது பர தத்துவத்தை எடுத்துச்சொல்கிறார்.

***"இல்லை நுணுக்கங்களே இதனில் பிறிது என்னும் வண்ணம்***
***தொல்லை நல் நூலில் சொன்ன உருவும் அருவும் நீயே"(7–8–10)*** என்பது தொன்மையான வேதத்தில் கூறப்பட்டபடி வடிவம் உள்ள அசித்தாகவும், அருவமான சித்தாகவும் நீயே இருக்கிறாய் என அர்த்தமாகிறது.
***"யாவையும் எவரும் தானாய் அவரவர் சமயம் தோறும்***
***தோய்வு இலன் புலன் ஐந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி***
***ஆவிசேர் உயிரின் உள்ளால் ஆதும் ஓர் பற்று இலாத***
***பாவனை அதனைக்கூடில் அவனையும் கூடலாமே"*** *(3–4–10)* எனும்போது இயங்காத அசேதனமான அஃறிணைபொருள்களுக்குள்ளும் அறிவுபெற்ற சித்தான ஆத்மாக்களுக்குள்ளும் எம்பெருமான் அந்தந்த நிலைகள் தோறும் கலந்து உள் உறைகிறான். அவற்றின் இன்பதுன்பங்களில் கலக்காமல் தன் இச்சை காரணமாகவே தங்குகிறான். ஐம்புலன்களால் அறியப்படாத ஞான வடிவானவன்.ஆத்மாவிற்கு வளர்தல், குறைதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படாததுபோலவே, ஆத்மாவின் இன்பதுன்பங்கள்,அதற்குள் தங்கும் எம்பெருமானுக்கு உண்டாவதில்லை.

***"பொழில் ஏழும் உண்ட எந்தாய்"***என்பதும்,***"நகரமும் நாடுகளும் ஞானமும் மூடமும் ஆய் நிகர் இல் சூழ்சுடர் ஆய் இருள் ஆய் நிலன் ஆய் விசும்பு ஆய்"*** *(6–3–3)* என்பதும், ***"நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமும்ஆய் வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமும்ஆய் பல்வகையும் பரந்த பெருமான்"*** *(6–3–1)*என்பதும், ***"ஏகமூர்த்தி இருமூர்த்தி மூன்றுமூர்த்தி பல மூர்த்திஆகி ஐந்து பூதம் ஆய் இரண்டு சுடர் ஆய் அருவு ஆகி" (4–3–3)*** என்பதும், ***"மூவுலகங்களும் ஆய் அல்லன் ஆய் உகப்புஆய் முனிவுஆய், பூவில்வாழ் மகள் ஆய் தவ்வை ஆய் புகழ்ஆய் பழி ஆய்"(6–3–6)***என்பதும்"
**"தீஆய் நீராய் நிலனாய் விசும்புஆய் கால் ஆய் தாய் ஆய் தந்தை ஆய் *மக்கள் ஆய் மற்றும் ஆய் முற்றும் ஆய் நீஆய் நின்றவாறு"(7–8–1)***
என்பதும் பகவான் எங்கும்பரந்து வியாபித்திருக்கிறார் என்பதை குறிக்கிறது.

***"தளர்வு இன்றியே என்றும் எங்கும் பரந்த தனிமுதல் ஞானம் ஒன்றாய் அளவு உடை ஐம்புலன்கள் அறியாவகையால் அருவு ஆகி நிற்கும் வளர் ஒளி ஈசனை மூர்த்தியை பூதங்கள் ஐந்தை இருசுடரை கிளர் ஒளி மாயனை கண்ணனை" .(3-10-10)*** எனும்போது எல்லா இடத்தும் தொய்வு இல்லாமல் பரந்து ஸூத்த ஸத்வமான எம்பெருமானுக்கு,சந்திரனும் சூரியனும்,ஐம்பூதங்களும் உடலாகும்.எம்பெருமான் எல்லாவற்றிலும் பரந்து இருந்தாலும் அவற்றினுடைய தோஷங்கள் அவனுக்கு ஏற்படாது. இதனால் அவன் மேலும் ஒளி அடைகிறான் என்பது கருத்து.

***"ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும் அல்ல புறத்தினுள்ளும் நீக்கமின்றி எங்கும் நின்றாய்"***(4-7-6) என்றபோதும்,***"ஆயே! இவ்வுலகத்து நிற்பனவும் திரிவனவும் நீயே: மற்று ஒரு பொருளும் இன்றி நீ நின்றமையால் நோயே மூப்பு இறப்பு பிறப்பு பிணியே என்றிவை ஒழிய கூயேகொள் அடியேனை" (4–9–7)*** எனும்போதும், ***"ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று நான்முகன் தன்னோடு தேவருலகோடு உயிர் படைத்தான்" (4–10–1*)** என்றபோதும், அவன் எங்கும் பரந்திருப்பதையும், *அவனே எல்லாவற்றையும் படைத்ததையும் நமக்கு ஆழ்வார் சொல்கிறார்.*

***"தோற்றம் கேடுஅவை இல்லவன்:உடையான்:அவன் ஒரு மூர்த்தியை" (3–6–6)*** எனும்போது, எம்பெருமானுக்கு உற்பத்தி,அழிவு ஆகிய இரண்டும் இல்லை என்றாலும் அக்குணங்களுடைய பொருள்களை தனது உடைமையாகக் கொண்டுள்ளான் என தெரிகிறது.

**எம்பெருமானின் குணங்கள் நிறைந்த தன்மை**

"***எண் பெருக்கந்நலத்து ஒண் பொருள் ஈறு இல" (1–2–10 )*** எனும்போது இறைவன்,ஞானம் முதலியகுணங்களின் எண்ணிக்கைபெருக்கில் மேலோங்கி உயர்ந்தவன் என பொருளாகிறது. ***" கர விசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை வரன் நவில் திறல் வலி அளி பொறையாய் நின்ற பரன்" (1–1–10)*** என சொல்லும்போது வானமும் அதில் ஒளியாகவும், தீயும் அதன் வெம்மை யாகவும்,காற்றும் அதன் மிடுக்காகவும்,நீரும் அதன் குளிர்ச்சியாகவும்,நிலமும் அதன் பொறுமையாகவும் இருக்கும் இறைவன் என சொல்கிறார்.

"குணங்கெழு கொள்கையினானே", "கணக்கு அறு நலத்தனன்", "நிகர் இல் அவன் புகழ் பாடி", "வாட்டமில் புகழ் வாமனன்" என்று பலவாறாக அவனது குணங்கள் நிறைந்த தன்மையை அனுபவிக்கிறார்.

"படிவானம் இறந்த பரமன் பவித்திரன்சீர்"என்பது பரமபதத்தில் தன் திருமேனிக்கு ஒப்பான பொருள் இல்லாதபடி தூய்மை வடிவாய் இருப்பவன் என்பதைக் குறிக்கிறது.

***"பிணக்கு அற அறுவகைச்சமயமும் நெறி உள்ளி உரைத்த கணக்கு அறு நலத்தனன் அந்தம் இல் ஆதி அம் பகவன்"*** **(1-3-5)-** எல்லையற்ற கல்யாண குணங்களுடைய திருமால்,அறுவகைப் புறச்சமயங்களுடன் வேத

மதத்துக்குண்டான பிணக்கு அறும்படி,வேதப்பொருளை விளக்கினான்.

***"நினைந்த எல்லாப்பொருள்கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே மனம் செய் ஞானத்து உன் பெருமை மாசூணாதோ" (1–5–2)*** என்பதால் எல்லாவற்றிற்கும் மூலபுருஷனான நீ பலவற்றிற்கும் காரணமாய் நின்று காரியப் பொருளாக மாறுபடும்பொழுது,வேறுபடாமல் இருக்கிற உன் பெருமைதான் என்னே ! என அவனது குணத்தை வியக்கிறார்.

அவன் ஆராதனைக்கெளியவன் என்பதை ***"பிணங்கி அமரர் பிதற்றும் "குணங்கெழு கொள்கையினானே" (1–6–4)*** என்றும்,"***விள்கை விள்ளாமை விரும்பி உள் கலந்தார்க்கு ஓர் அமுதே"(1-6-5)*** என்றும், ***" அமுதிலும் ஆற்ற இனியன்"(1–6–6***) என்றும் சொல்லி அனுபவிக்கிறார்.

அவனுக்காட்பட்டு இருத்தலே தனி இன்பம் என்பதை,முதல் திருவாய்மொழி ஏழாம் பத்தில் முழுவதுமாக விளக்குகிறார்."***மயர்வு அற என் மனத்தே மன்னினான் தன்னை"(1-7-4)*** என்றும்,***" எப்பால் எவர்க்கும் நலத்தால் உயர்ந்து உயர்ந்து அப்பாலவன் எங்கள் ஆயர் கொழுந்தே"(1-7-2)*** என்று அனுபவிக்கிறார்.

***"நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைகளுக்கெல்லாம் ஆவியும் ஆக்கியும் தானே"(1-9-8)*** என்றபடி ஞானக்கலைகளுக்கெல்லாம் அவனே உயிரும் உடலும் ஆவான் என தெரிவிக்கிறார்.

***"மாசூணாச் சுடர் உடம்பு ஆய் மலராது குவியாது<br>மாசூணா ஞானமாய் முழுதுமாய் முழுது இயன்றாய்<br>மாசூணாவான் கோலத்து அமரர் கோன்" (3-1-8)*** எனும்போது குற்றமற்ற நற் குணங்கள் நிறைந்த ஜோதிமயமான திருமேனியுடைய நீ, மலர்தலும் குவிதலும் இல்லாத, ஸ்வயம் பிரகாச ஞானமுடையவன். நீயே குணம், விபுதிகள் உடையவனாய் உலகையே உடம்பாக கொண்டாய் எனும் பொருளுடன் நமது ஸித்தாந்தத்தையே சாறாக பிழிந்து அளித்துள்ளார்.

***"சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனி ஒளி ஒவ்வாது'(3-1-2)*** என அவனது உடம்பின் ஒளியை வர்ணிக்கிறார்.***" மறை ஆய நால் வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே"(3-1-10)*** என்று வேதங்களின் உள் பொருள் அவன் ஒருவனே என்பதை எடுத்துச்சொல்கிறார்.எல்லோர்க்கும் அவனே தெய்வம் என்பதை ***"இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்" (4-10-5)*** என்ற பாசுரத்தில் தெரிவிக்கிறார்.

அடியவர்களுக்கு எளியவன் என்பதை, ***"பத்து உடை அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்"(1-3-1)*** என்றும் ,***"எளிவரும் இயல்வினன்"(1-3-2)*** என்றும், தீவினைகளைப் போக்கும் மருந்தானவன் என்பதை,***" வினையேன் வினை தீர் மருந்தானாய்",*** என்றும் சொல்லி விளக்குகிறார்.

மூவுலகங்கள் தொடக்கமான யாவற்றுக்கும் மூவகைக்காரணமாக உள்ளவன்

என்பதை,*"சீர்மை கொள் வீடு சுவர்க்கம் நரகு ஈறா
ஈர்மை கொள் தேவர் நடுவா மற்று எப்பொருட்கும்
வேர் முதல் ஆய் வித்து ஆய் பரந்து தனி நின்ற
கார்முகில் போல் வண்ணன் என் கண்ணனை நான் கண்டேனே"(2-8-10)*
என்ற பாசுரத்தில் தெரிவிக்கிறார்.

எங்கும் பரந்த நீயே ஒப்பற்ற முதல்வன் ஆவாய். போகம், மோக்ஷம் ஆகியவற்றுக்கு ஆதாரமான மூல பிரகிருதிக்கு தலைவன் நீயே. நீ தான் சூழ்ந்து, அகன்று, ஆழ்ந்து, உயர்ந்து இருக்கிறவனாய், முடிவில்லாத ஆத்மாக்களுக்கு ஆத்மாவாய் இருக்கிறாய் என்பதனை கடைசி இரண்டு பாசுரங்களான,*" முதல் தனி வித்தேயோ, முழுமூவுலகு ஆதிக்கெல்லாம் (10-10-9)* என்றபடியும், *"சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும் பாழே ஓ!____சூழ்ந்து அதனில் பெரிய சுடர் ஞான இன்பமே ஓ!" (10-10-10)* என்றபடியும் சொல்லி விசேஷணங்களுடன் கூடிய பரமாத்மாவே ஸத்யம் என நமது ஸித்தாந்தத்தை விளக்குகிறார்.

## 2. ஆத்ம ஸ்வரூபம்

ஆத்மாவிற்கும் பகவானுக்குமான ஸம்பந்தத்தை,*"எண் பெருக்கு அந்நலத்து ஒண் பொருள் ஈறு இல, வண் புகழ் நாரணன் திண்கழல் சேரே"(1-2-10)* என்ற பாசுரத்தின் மூலமாக, ஞானம் முதலிய குணங்கள் நிறைந்த பரமாத்மா,ஆத்மாவை தன் உடைமையாக கொண்டவன் என சொல்கிறார் .
*"மின்னின் நிலை இல மன் உயிர் ஆக்கைகள்
என்னும் இடத்து இறை உன்னுமின் நீரே"(1-2-2)* எனும்போது அழிவற்ற ஆத்மாக்கள் தங்கும் உடம்பு (ஸரீரம்) நிலையற்றது என்பதை சுட்டிக் காட்டுகிறார். *"உம் உயிர் வீடு உடையானிடை வீடு செய்ம்மினே"(1-2-1)* என்று சொல்லும்போது ஆத்மாவை பரமபதத்தில் சேர்க்கும் சக்தி எம்பெருமான் ஒருவனுக்கே உண்டு என்பது தெளிவாகிறது.

*"அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்
செற்றது மன் உறில் அற்று இறை பற்றே" (1-2-5)* என்பதற்கு உலகியல் மீதுள்ள பற்றுகளை நீக்கினால் ஆத்மா வீடுபெறும் என பொருளாகிறது. "நீ எம்பெருமானுக்கே" என நினைத்து,அவனைப் பற்று என்கிறார்.

*"நெஞ்சமே நல்லை நல்லை உன்னைப் பெற்றால்
என் செய்யோம் இனி என்ன குறைவினம்?"(1-10-4)* எனும்போது மனமாகிய ஆத்மாவின் நன்மை செய்யம் குணத்தால் இனி எனக்கு என்ன குறை என ஆத்மஸ்வரூபத்தை அனுபவிக்கிறார்.

என் மனத்தினுள் புகுந்துள்ள அவன் ஒளி வெள்ளமாக உள்ளான் என்பதை *"ஒக்கவே விழுங்கிப் புகுந்தான்"* என்கிறார். ஆத்மாக்கள் இடைவிடாமல் துன்பம் தரும் பிறவிக்கடலில் சிக்கியுள்ளார்கள் என்பதை,*" ஓவாத்துயர் பிறவி உட்பட மற்று எவ் எவையும் மூவாத் தனி முதலாய் மூவுலகும் காவலோன்"(2-8-5)* என தெரிவிக்கிறார்.

பிறப்பு இறப்பு இரண்டும் அவனாலேயே ஏற்படுகிறது. உடலாக இருக்கும் அவனே அதை இயக்கும் ஆதமாவாயும் உள்ளான் எனபதை ***"காயமும் சீவனும் ஆய் கழிவு ஆய் பிறப்பு ஆய்"*** என்று தெரிவிக்கிறார்.

***"வார்த்தை அறிபவர் மாயவர்க்கு ஆளன்றி ஆவாரோ***
***போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பு இவை***
***பேர்த்து பெரும் துன்பம் வேரற நீக்கி தன் தாளின் கீழ்***
***சேர்த்து அவன் செய்யும் சேமத்தை எண்ணித் தெளிவுற்றே"****(7-5-10)*
ஆத்மா தன்னை உள்ளபடி அறியமுடியாததால் பிறவிகள் ஏற்படுகின்றன. முதுமை,நோய், மரணம் உண்டாகின்றன.பகவான் அருளாலேயே ஆத்மா இவற்றை நீக்கி கொள்ள இயலும் தன் திருவடிக்கீழ் ஆத்மாக்கள் உய்வு பெறும் அருளை கண்ணன் கீதையில் வார்த்தையாக அருளினான் என்கிறார்.

***"யானே என்னை அறியகிலாதே***
***யானே என் தனதே என்று இருந்தேன்***
***யானே நீ:என் உடைமையும் நீயே"****(2-9-9),*எனும்போது உனக்கு அடிமைப் பட்டு சிறப்பு செய்யும் உறுப்பாய் இருக்கவேண்டியதை அறியாமல் "நான்" என்றும்,"என்னுடையது" என்றும் இருந்தேன். நானும் என் உடைமைகளும் நீ இட்டவையே என்பதை உணர்ந்தேன் என்று சொல்லி ஆத்மாவின் நிலையை விளக்குகிறார்.

ஒப்பற்ற நித்யமான ஆத்மா எம்பெருமானின் உறுப்பே என்பது,***"நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு, அதனுள் நேர்மை அது இது என்று ஒன்றும் ஒருவர்க்கு உணரலாகாது உணர்ந்தும் மேலும் காண்பு அரிது"*** *(8-8-5)* என்பதன் மூலம் தெரிகிறது. இதை அறியாதவர் ஞானம் பெற்றவரல்லர் என்கிறார்.

***"என்னது ஆவி மேலையாய்! ஏர் கொள் ஏழுலகமும்***
***துன்னி முற்றும் ஆகி நின்ற சோதி ஞான மூர்த்தியாய்***
***உன்னது என்னது ஆவியும் என்னது உன்னது ஆவியும்***
***இன்ன வண்ணமே நின்றாய் என்று உரைக்க வல்லேனே?"*** *(4-3-8)*
என் ஆத்மாவிலே ஆசை உடையவனாய்,எழுலகங்களிலும் முழுதுமாய் பரந்து, எல்லாம் உன் பகுதிகளாகநின்ற, ஒளிமயமான ஞானவானே! என் ஆத்மா நீ இட்ட வழக்கு. உனக்கு இனியது. உன் ஆத்ம இயல்போ எனக்கு இனியது. நான் இட்ட வழக்கு. இப்படி இருபுறமும் ஒன்றானபின், நீ இன்ன வண்ணம் உள்ளவன் என்று என்னால் கூற இயலாது என்கிறார்.

ஆத்மா உடலை விட்டு பிரியும்போது, அதற்கு பரமபதம் அருளுபவன் எம்பெருமானே,என்பதை,***"சரணம் ஆகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம் மரணம் ஆனால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்"****(9-10-5)* என்றும், ***"அணியன் ஆகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம் பிணியும் சாரா பிறவி கெடுத்து ஆளும்"*** *(9-10-8)* என்றும் தெரிவிக்கிறார்.

சூடான இரும்பு தண்ணீரை இழுத்துக்கொள்ளுவதுபோல,நீ என் ஆத்மாவைப் பருகி எனக்கு ஆராவமுதானாய். என்னை புறத்தே விட்டு வைக்கலாமா? உன் உடைமையான என்னை நீ கை விடலாமா? என்பதை, ***" தீர இரும்பு உண்ட நீரதுபோல என் ஆருயிரை ஆரப்பருக எனக்கு ஆரா அமுது ஆனாயே"*** ***(10-10-5)*** என்ற பாசுரத்தில் தெரிவிக்கிறார்.

***"எனது ஆவியுள் கலந்த பெருநல் உதவிக் கைம்மாறு***
***எனது ஆவி தந்தொழிந்தேன் இனி மீள்வது என்பதுண்டே***
***எனது ஆவி ஆவியும் நீ பொழில் ஏழும் உண்ட எந்தாய்***
***எனது ஆவி யார்? யான் யார்? தந்த நீ கொண்டாக்கினையே"(2–3–4)***

நீ என்னுயிரில் கலந்ததற்கு என் ஆத்மாவை உனக்கு தருகிறேன் எனது உயிரை தருகிறேன் என்பதே பொருளற்றது.நான் யார்? என் உயிர் யார்? இரண்டுமே உன் அடிமைகளாக இருக்கும்போது,கொடுத்த நீயே கொள்கிறாய் என்பதன்றோ ஆகிறது,எனச் சொல்லி ஜீவாத்ம பரமாத்ம ஸம்பந்தத்தையும் ஆத்மாவின் ஸ்வரூபத்தையும் தெளிவு படுத்துகிறார்.

## ३. உபாய ஸ்வரூபம்

*(பகவானை ஆத்மா அடையும் வழி.)*

***"நன்றாய் ஞானம் கடந்து போய் நல் இந்திரியம் எல்லாம் ஈர்த்து***
***ஒன்றாய்க்கிடந்த அரும்பெரும்பாழ் உலப்புஇல் அதனை உணர்ந்துணர்ந்து***
***சென்று ஆங்கு  இன்ப துன்பங்கள் செற்றுக்களைந்து பசை அற்றால்***
***அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே"(8–8–6)***

ஐம்புலன்களால் உண்டாகும் தாக்கங்களை கடந்து அவற்றுடன் பிணைந்த பிரக்ருதி அதைவிட வேறுபட்டது என்று உணர்வது முதற் படியாகும். இன்ப துன்பங்களுக்கு காரணமான புண்ணிய பாவங்களை விட்டு விலக வேண்டும். அவற்றிலுள்ள வாசனைகளும் நீங்கப் பெற்றால் ஸம்ஸாரத்திலிரிந்து ஆத்மா விடுபடும். இவ்வாறு பிரக்ருதி தொடர்பு விடுபட்ட ஆத்மாவின் அனுபவமே வீடு (புருஷார்த்தம்) ஆகுமென்கிறார்.

***"அதுவே வீடு வீடு பெற்று இன்பந் தானும் அது தேறி***
***எதுவே தானும் பற்று இன்றி யாதும் இலிகள் ஆகிற்கில்***
***அதுவே வீடு வீடு பேற்று இன்பந் தானும் அது தேறாது***
***எதுவே வீடு? ஏது இன்பம் ? என்று எய்த்தார் எய்த்தார் எய்த்தாரே"***

***(8–8–7)*** ஆத்மா இறைவனின் சரீரம் என்றுணர்வதே வீட்டின்பம். எம்பெருமானே ஆத்மாவுக்கு பற்றபடுகிற உயிர் என்பதை அறியாத வெறும் ஆத்மானுபவம் மோட்சம் ஆகாது. ஆத்மா இறைவனுக்கு அடிமைப்பட்டது என்பதை அறிந்தால், பொருள்களில் பற்று அற்று வீடு கிடைக்கும்.இதை அறியாமல்,"வீட்டின்பம் எது?" என கலங்குபவர் தளர்ச்சியே அடைவர்.

***"உய்ந்து போந்து என் உலப்பு இலாத வெம்தீவினைகளை***
***நாசம் செய்து  உனது அந்தம் இல் அடிமை அடைந்தேன் விடுவேனோ"***

***(2–6–5)*** இப்பாசுரத்தில் ஆழ்வார் "உன்னை விடாமல் சிந்தை செய்து உய்வு பெற்றேன்.ஆத்மாவின் இயல்பை அறிந்து கொடிய தீவினைகள் அகற்றப்பட்டு உன்னடிக்கீழ் கைங்கர்யம் செய்யும் அடிமைத்தொழில் கிடைத்தது உன்னருளே"

என ஆத்மா அடையவேண்டிய புருஷார்த்தத்தை தெரிவிக்கிறார்.

**"....கலைப்பல ஞானத்து என் கண்ணனைக் கண்டு கொண்டு**
**நிலைப்பெற்றது என் நெஞ்சம் பெற்றது நீடு உயிரே " (3–2–10)**
பலவகை பட்ட நூல்களை கற்ற அறிவால் தேர்ந்து கண்ணபிரானை நான் கண்டுகொண்டேன். அவனருளால் என் நெஞ்சு நிலை பெற்றது உயிரும் நிலைத்தது. ஆத்மாவும் நித்யத்வம் பெற்றது என அவனிடம் சரணடைவதே உபாயம் என்கிறார். ***"மாறி மாறி பலபிறப்பும் பிறந்து அடியை அடைந்து உள்ளம் தேறி ஈறு இல் இன்பத்து இருவெள்ளம் யான் மூழ்கினன்,"*** *(2–6–8)* எனும்போது அடுத்தடுத்து பல பிறவிகள் பெற்று முடிவில் உன் அருளால் உன் திருவடிகளை அடைந்து மனத்தெளிவு பெற்றேன் என சரணாகதியை உபாயமாக சொல்கிறார்.
எம்பெருமானைக்கண்டு அத்தாய்தந்தையருடன் கூடுவதே முக்தியாகும்.
பிறவிக்கடலைநீந்த அவனே தெப்பக்கட்டையாக இருந்து உதவுகிறானென்பதை
***"அணைவது அரவு அணைமேல்; பூம்பாவை ஆகம்***
***புணர்வது; இருவர் அவர் முதலும் தானே;***
***இணைவன் ஆம் எப்பொருட்கும் வீடு முதல் ஆம்***
***புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே"*** *(2-8-1)* என சொல்கிறார்.
"***செடி ஆர் வினைகள் தீர் மருந்தே***" என்பதும் இதே கருத்தை தெரிவிக்கிறது.

***"சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே தந்தை, தாய் என்றடைந்த வண்குருகூரவர் சடகோபன்"*** ***(6-5-11)*** என்பதும் அவனே உபாயம், வேறொரு உபாயமில்லை என தெரிவிக்கிறது.

எல்லை இல்லாத நன்மைகளை அளிக்கும் மோட்சத்தை அடைய, சிற்றின்பம் தரும் ஐந்து புலன்களின் வழிச்செல்லாமல், எம்பெருமானின் கல்யாண குணங்களில் ஈடுபடுங்கள் அவை உங்கள் பிறவியை போக்கும் மருந்தாகவும், சுவை உடைய இனிய உணவாகவும் உள்ளன, என்பதை
***"புலன் ஐந்து மேயும் பொறி ஐந்தும்நீங்கி***
***நலம் அந்தம் இல்லது ஓர் நாடு புகுவீர்***
***அலமந்து வீய அசுரரைச் செற்றான்***
***பலம் முந்து சீரில் படிமின் ஓவாதே"*** *(2–8–4)*என மோக்ஷத்திற்கு வழிகாட்டுகிறார்.
***"நாடீர் நாள்தோறும் வாடாமலர் கொண்டு***
***பாடீர் அவன் நாமம் வீடே பெறலாமே"*** *(10–5–5)* என்பது பகவானை அர்ச்சனை செய்து பாடி வழிபடுங்கள். இந்த பக்தியே வீடு பேற்றை பெற உதவும் என தெரிவிக்கிறது.

***"கழிமின் தொண்டீர்கள் கழித்து தொழுமின் அவனை தொழுதால்***
***வழிநின்ற வல்வினை மாள்வித்து அழிவின்றி ஆக்கம் தருமே"(1–6–8)***
ஆசைகளை அறவே விட்டு இறைவனை தொழுதால், தொடர்ச்சியாய் வருகிற வினைப்பயன்கள் யாவும் நீங்கும். பரமபதத்தில் செய்யப்படும்

கைங்கர்யம் ஆகிற செல்வத்தை அவன் தருவான் என்கிறார்.

தன்னை அடைந்தவர்களை கைவிடமாட்டான் என்பதை, ***" அயர வாங்கு நமன் தமர்க்கு அரு நஞ்சினை அச்சுதன் தன்னை"(3-6-8)*** என்கிறார். ***"மின் ஆர் மணிமுடி விண்ணவர் தாதையைப் பாடினால் தன்னாகவே கொண்டு சன்மம் செய்யாமையும் கொள்ளுமே"(3-9-4)*** என்று சொல்லும்போது நித்திய சூரிகளின் தந்தையைப் பாடினால் அவன் உங்கள் அடிமையை ஏற்று பிறவிப்பிணியை போக்குவான் என்கிறார்.

இவ்வுலகில் செல்வங்கள் நிலையற்றவை. நாட்டை இழந்த அரசனுக்கும் பிச்சை ஏற்க நேரிடுகிறது. இதனை உணர்ந்து ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளில் பணிந்து பற்றுங்கள். அதுவே உபாயமாகும் என்பதை
***"ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்***
***கருநாய்கவர்ந்த காலர் சிதைகியபானையர்***
***பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்***
***திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்மினோ"(4-1-1)***எனகூறுகிறார்.

***"குறுக மிக உணர்வதொடு நோக்கி எல்லாம் விட்ட***
***இறுகல் இறப்பு என்னும் ஞானிக்கும் அப்பயன் இல்லையேல்***
***சிறுக நினைவது ஓர் பாசம் உண்டாம் பின்னும் வீடு இல்லை***
***மறுகல் இல் ஈசனைப் பற்றி விடாவிடில் வீடு அ:்தே"(4-1-10)***
மனத்தை ஞான வடிவான ஆத்மாவுடன் ஒன்றுபடுத்தி பற்றுகளை விட்டு எம்பெருமானையே உபாயமாக பற்றாவிடில் கர்மம் போகாமலே நிற்கும். பகவானை வழிபடாவிட்டால் ஞானிக்கும் மோக்ஷமில்லை. எனவே குற்றமற்ற பகவானை அடைந்து கைங்கர்யம் செய்வதே மோக்ஷமாகுமென்கிறார்.

பிறப்பு இறப்பு நீங்கும்படி என்னைக் கூட்டிக்கொள் என்பதை
***"ஆயே இவ்வுலகத்து நிற்பனவும் திரிவனவும்***
***நீயே மற்றொரு பொருளும் இன்றி நீ நின்றமையால்***
***நோயே மூப்பு இறப்பு பிறப்பு பிணியே என்று இவை ஒழிய***
***கூயே கொள் அடியேனை கொடு உலகம் காட்டேலே"(4-9-7)*** என்கிறார்.

கர்மயோகத்தையும், ஞானயோகத்தையும் நான் செய்யவில்லை. பக்தியோகமும் இல்லாததால் எந்தக் கைம்முதலும் இல்லாதவன். ஆனாலும் கூட உன்னைப் பிரிந்து இருக்க இயலாதவன். கதியற்ற எனக்கு நீயே அருள வேண்டும். உன் அருளே உபாயமென்பதை
***"நோற்ற நோன்பு இலேன் நுண் அறிவு இலேன் ஆகிலும் இனி உன்னை விட்டு***
***ஒன்றும், ஆற்ற கிற் கின்றிலேன் அரவிணனை அம்மானே***
***சேற்றுத்தாமரை செந்நெலூடு மலர் சிரீவரமங்கலநகர்***
***வீற்றிருந்த வெந்தாய் உனக்கு மிகை அல்லேன் அங்கே" (5-7-1)***என்றும்,
"சங்கு சக்கரத்தாய் தமியேனுக்கு அருளாயே"என்றும், "அந்தம் இல் புகழாய் அடியேனை அகற்றேலே"என்றும், " உள் இருந்த எந்தாய் அருளாய்

உய்யுமாறு  எனக்கே" என்றும் பலவாறாக பகவானைப் பிரார்த்திக்கிறார்.

"***புண்ணை மறைய வரிந்து என்னைப் போர வைத்தாய் புறமே***" *(5-1-5)* என சிற்றின்பத்தில் தள்ளப்பட்டதை சொல்லி," ***என் கண் மலினம் அறுத்து என்னைக் கூவி அருளாய்***" *(5-1-4)* என்று அஞ்ஞானத்தை போக்கி, தன்னை அழைத்துக்கொள்ளுமாறு பகவானிடம் பிரார்த்திக்கிறார்.

***"உன்னாலல்லால்   யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்"*** *(5–8–3)*என வேறு உபாயங்களில்லை என்பதை சொல்கிறார். "***தொழுவனேனையுனதாள் சேரும் வகையே சூழ் கண்டாய்***"*(5–8–5)* என்றும், "***உன் அடி சேரும் ஊழ் கண்டிருந்தே தூராக்குழி தூர்த்து எனை நாள் அகன்று இருப்பன்***" என்றும், "***தரியேன் இனி உன் சரணம் தந்து என்சன்மம் களையாயே***" *(5–8–7)* என்றும், "***தளரா உடலம் எனதாவி சரிந்து   போம்போது   இளையாது உனதாள் ஒருங்கப் பிடித்துப் போத இசை நீயே***"*(5–8–8)* என்றும்," "***இசைவித்து என்னை உன்தாளிணைக்கீழ் இருத்தும் அம்மானே***"*(5–8–9)* என்றும், "***கழல்கள் அவையே   சரணாகக் கொண்ட***"*(5–8–11)* என்றும் சொல்லி அவன் தாள்களில் சரணடைவதே உபாயம் என்கிறார்.

**"தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்ப த்**
**தந்த பேருதவிக் கைம்மாறாத்**
**தோள்களை ஆரத் தழுவி என்னுயிரை**
**அற விலை செய்தனன் சோதீ !...." (8-1-10)** *நீ என்னை ஆட்கொண்டு உன்* திருவடிகளைத் தந்து நான் மேன்மேலும் உயர்வடியும்படி அருள் செய்ய வேண்டும். இதற்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும் ? என் உயிரின் தோள்களைத் தழுவி ஆத்மாவையே உனக்கு விலை செய்து கொடுக்கிறேன் என அவனது அருளே வீட்டின்பத்திற்கு உபாயமென்கிறார்.

"***ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய் உனக்கு ஓர் கைம் மாறு நான் ஒன்று இலேன்எனது ஆவியும் உனதே***"*(5-7-10)* அடியேனுக்கு உன் திருவடிகளே உபாயம் ஆகும்படி நீயே அருளினாய். இதற்கு என்ன மறு பயன் செய்யப்போகிறேன்? என் ஆத்மா உன்னடையதே. ஆகவே என்னால் ஆகும் கைம்மாறு இல்லை என தமது ஆகிஞ்சந்யத்தை (கைம்முதலில்லாமையை ) தெரிவிக்கிறார். "***பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய் .........அருள் செய்து அங்கிருந்தாய்! அறியேன் ஒரு கைம்மாறே***" *(5-7-3)* என்பதும் இதே கருத்தை சொல்கிறது.

## 4.விரோதி ஸ்வரூபம்

ஸம்ஸார பந்தத்தினாலும், ஸரீர ஸம்பந்தத்தினாலும் பகவானை அடைவதில் நமக்கு ஏற்படும் தடைகள்  விரோதி ஸ்வரூபமாகும். ***"என்னை ஆளும் வன்கோ ஓர் ஐந்து இவை பெய்து இராப்பகல் மொதுவித்திட்டு உன்னை நான் அணுகா வகை செய்து போதி கண்டாய்__*** "*(7–1–2)* என உடலில் உள்ள ஐந்து புலன்களாகிய கொடியவர்கள் இராப்பகலாய் என்னை மோதுகிறார்கள்.

இவர்களால் தாக்கப்பட்ட நான் உன்னை அணுகாதபடி தடுக்கப்படலமா? என பகவானிடம் ஆதங்கத்தை தெரிவிக்கிறார்.

***தீர் மருந்து இன்றி ஐந்து நோய் அடும் செக்கில் இட்டுத் திரிக்கும்***
***ஐவரை நேர் மருங்கு உடைத்தா, அடைத்து நெகிழ்ப்பாய்***
***ஒக்கின்றாய், ஆர் மருந்து இனி ஆகுவார்?"*** *(7-1-5)* என ஐம்புலன்களால் ஏற்பட்ட நோய்க்கு பகவானே மருந்து எனச் சொல்கிறார்.
***"ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத ஓர் ஐவர் வன் கயவரை***
***என்று யான் வெல்கிற்பன் உன் திருவருள் இல்லையேல்?"(7–1–7)***
என்பதும் இதே கருத்தைச் சொல்லும் பாசுரம்.

பொறி புலன்களின் இன்பம், தொடக்கத்தில் இன்பம் போல தோன்றினாலும் முடிவில் நஞ்சாகி விடுகிறது.இப்படி மடக்கும் சிற்றின்பங்களிலிருந்து என்னை காத்து வேர்ப்பற்று அற விடுவித்து நீயே அருள வேண்டும் என்பதை கீழ்க்கண்ட பாசுரத்தில் தெரிவிக்கிறார். **(7–1–8)**
***"இன் அமுது எனதோன்றி ஓர் ஐவர் யாவரையும் மயக்க நீ வைத்த***
***முன்னம் மாயம் எல்லாம் முழு வேர் அரிந்து என்னை உன்***
***சின்னமும் திருமூர்த்தியும் சிந்தித்து ஏத்தி கை தொழவே அருள்எனக்கு"***

குலத்தோடு அழிக்கும் வன்மை கொண்ட ஐம்புலன்கள் தீவினைக்குழியில் அடியேனைத் தள்ளாதவாறு நீயே அருள் செய்ய வேண்டும் என்பதை
***"குலம் முதல் அடும் தீவினைக் கொடுவன் குழியினில் வீழ்க்கும் ஐவரை***
***வலம் முதல் கெடுக்கும் வரமே தந்தருள் கண்டாய்"****(7-1-9)* என சொல்கிறார்.

***"வன் பரங்கள் எடுத்து ஐவர் திசைதிசை வலித்து எற்றுகின்றனர்***
***முன் பரவை கடைந்து அமுதம் கொண்ட மூர்த்தீயோ!"****(7-1-10)* என்பதும் இதையே குறிக்கிறது. ***"சதுரம் என்று தம்மைத்தாமே சம்மதித்து இன்மொழியார்***
***மதுர போகம் துற்றவரே வைகி மற்று ஒன்று உறுவர்"*** *(9-1-5)* என்ற பாசுரத்தில் நல்ல வாழ்வு என்று தம்மைப் புகழ்ந்தவாறு இனிமையாகப் பேசும் பெண்களின் போகத்தில் வாழ்ந்தவர் இளமை கழிந்தபின் அவர்களால் புறக்கணிக்கப்படுவர் என சிற்றின்பத்தின் விளைவை கூறுகிறார்.

***"பொருள் கைஉண்டாய்ச் செல்லக்காணில் போற்றி என்று ஏற்று எழுவர்***
***இருள் கொள் துன்பத்து இன்மை கானில் என்னே! என்பாரும் இல்லை***
***(9–1–3)*** என்றும்,"***துணையும் சார்வுமாகுவார் போல் சுற்றத்தவர் பிறரும்***
***அணைய வந்த ஆக்கம் உண்டேல் அட்டைகள் போல் சுவைப்பர்"(9–1–2)***
என்றும் சொல்லி ஒருவனிடம் பொருள் மற்றும் செல்வம் உள்ளவரையே சுற்றத்தார் ஒட்டி இருந்து வாழ்த்தி பயன்பெறுவர். வறுமை ஏற்பட்டபின் இரக்கப்பட யாரும் இருப்பதில்லை. ஆதலால் உலக இன்பங்களில் ஈடுபட்டு பகவானின் நினைவு நீங்கி வாழ்வதில் யாதொரு பயனும் இல்லை என்கிறார்.

***"கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறரும்***

***கண்டதோடு பட்டது அல்லால் காதல் மற்று யாதும் இல்லை***
***எண்திசையும் கீழும் மேலும் முற்றவும் உண்ட பிரான்***
***தொண்டரோமாய் உய்யல் அல்லால் இல்லை கண்டீர் துணையே"(9-1-1)***
சுற்றத்தாரும் நண்பர்களும் பொருள் உள்ளபோது ஒட்டியும், அல்லாதபோது விலகியுமிருப்பர். பத்துத்திக்கிலுமுண்டான ஸகலசேதனரையும் பிரிகதிர்ப் படாமே திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தவன் என்று ஈடு வ்யாக்கானம். அவன் துணையே உய்வு பெற சிறந்த வழி.

***"கிறி செய்து என்னைப் புறத்திட்டு இன்னம் கேடுப்பாயோ***
***பிறிது ஒன்று அறியா அடியேன் ஆவி திகைக்கவே " (6-9-8)***
எனது ஆவி திகைத்துக் கலங்கும்படி புறத்தே தள்ளி விடாதே என்றும்
***"ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம்***
***பாவியேனைப் பல காட்டி ப்படுப்பாயோ***
***தாவி வையம் கொண்ட தடம் தாமரைகட்கே***
***கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ ?" (6-9-9)***
வீடு பேறாகிய பேரின்பத்துக்கென்று பிறந்த என்னை, புலன்களுக்கு மூலமான மனம் கலங்க சிற்றின்பத்தில் தள்ளல் ஆகாது.உன்திருவடிகளுக்கு அழைத்துக் கொள்ளும் காலம் அருகில் வராதோ என தனது ஆதங்கத்தை தெரிவிக்கிறார்.
***"தூமனத்தனனாய் பிறவி துழதி நீங்க என்னை***
***தீ மனம் கெடுத்தாய் உனக்கு என்செய்கேன்? என் சிரீதரனே!"(2-7-8)***
என் பிறவித்துன்பம் நீங்கும்படி தீயமனத்தை தொலைத்து உன் நினைவையே எனக்கு கொடுத்தாய் என்கிறார்.இதன் மூலம் அவனது நினைவுடன் இருப்பதே விரோதி ஸ்வரூபத்தை தவிர்க்க உதவும் உபாயம் எனத்தெரிகிறது.

## 5.புருஷார்த்த ஸ்வரூபம்

ஆத்மானுபவமான கைவல்யம் தள்ளத்தக்கது.அடிமைப்பேறான கைங்கர்யமே கொள்ளத்தக்கது -என்பதை
***"குறுகா நீளா இறுதி கூடா எனை ஊழி***
***சிறுகா பெருகா அளவு இல் இனபம் சேர்ந்தாலும்***
***மறுகால் இன்றி மாயோன்! உனக்கே ஆளாகும்***
***சிறுகாலத்தை உறுமோ? அந்தோ! தெரியிலே"(6-9-10).*** குறையாமலும், வளராமலும்,சிறுகாமலும், பெருகாமலும், நிலையாய் உள்ள கைவல்யம் எனக்கு சிற்றின்பமே. ஊழிகாலமெல்லாம் அனுபவித்தாலும் அது பயனற்றது. உன் திருவடிகளில் கைங்கர்யம் செய்வது, சிறு பொழுதாயினும், அதுவே எனக்கு முடிவான உறுதிப்பொருள் என புருஷார்த்தத்தின் மேன்மையை விளக்குகிறார்.
***"எனக்கே ஆட்செய் எக்காலத்தும் என்று என்***
***மனக்தே வந்து இடைவீடு இன்றி மன்னி***
***தனக்கே ஆக எனைக்கொளும் ஈதே***
***எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே" (2-9-4)***
"எப்பொழுதும் எனக்கே அடிமை செய்"என்று கூறி என்நெஞ்சிலே தேவரீர் எழுந்தருளவேண்டும். தனக்கே உரியவன் ஆகும்படி என்னை ஏற்றுக்

கொள்வதே கண்ணனிடத்தில் நான்விரும்பும் புருஷார்த்தம் என சொல்கிறார்.
***"தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து நின்தாளினைக்கீழ்***
***வாழ்ச்சி யான் சேரும்வகை அருளாய் வந்தே " ( 3–2–4)***
நான் உலக விழயங்களில் ஆசையற்று உன் திருவடிகளை பற்றி அவற்றின் கீழ் நிரந்தர கைங்கர்யம் செய்ய அருளவேண்டும் என பிரார்த்திக்கிறார்

***"சன்ம சன்மாந்தரம் காத்து அடியார்களைக் கொண்டுபோய்***
***தன்மை பெறுத்தி தன் தாளிணைகீழ்க்கொள்ளும் அப்பனை"(3–7–7)***
என்பது எம்பெருமான் தன் அடியார்களுக்கு அருள்செய்து அவர்கள் பிறவித் தொல்லையை களைந்து தன் அடிக்கீழ் அடிமை செய்யும்படி ஆக்கிக் கொள்கிறான் என்னும் கருத்தை சொல்கிறது.

***"ஒழிவு ஒன்று இல்லாத பல் ஊழிதோறு ஊழி நிலாவப்போம்***
***வழியைத் தரும் நங்கள் வானவர் ஈசனை நிற்கப்போய்***
***கழிய மிக நல்ல வான்கவி கொண்டு புலவீர்காள்"(3-9-3)***
நித்யசூரிகளின் தலைவனான எம்பெருமான் காலதத்துவம் முழுவதும் தொடந்து பரமபத அனுபவம் அருளி அங்கு செல்லும் அர்ச்சிராதி வழியையும் காட்டுவான். அவனை பாடுங்கள் சிறிய மனிதர்களை பாடி பலனில்லை என்கிறார்

*"புனை என்று உய்யப்போகல் இல்லை கண்டீர் பொருளே"*
*"அருள் கொள் ஆளாய் உய்யல் அல்லால் இல்லை கண்டீர் அரனே"*
*"சரண் என்று உய்யப்போகல் அல்லால் இல்லை கண்டீர் சதிரே"*
*"எதிர் கொள் ஆளாய் உய்யல் அல்லால் இல்லை கண்டீர் இன்பமே"*
*"வான் புகழே சொல்லி உய்யப்போகல் அல்லால் மற்றொன்றில்லை சுருக்கே"*
*"குற்றம் இல் சீர் சுற்றுவைகல் வாழ்தல் கண்டீர் குணமே"* என்று பலவாறாக அவன் தாள்களில் சரணடைவதே உபாயமென்கிறார்.

***யாதும் இல்லை மிக்கு அதனில் என்று என்று அது கருதி***
***காது செய்வான் கூதை செய்து கடைமுறை வாழ்க்கையும் போம்***
***_ தாது சேர் தோள் கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரணே(9–1–9)***
எனும்போது பகவானுக்கு வேறுபட்ட எதை நம்பினாலும் அது துணை ஆகாமல் வாழ்க்கை பாழாகும் ஆதலால் கண்ணனே நமக்கு புகழ் ஆவான் என சொல்கிறார்.

***திண்ணமா நும் உடைமை உண்டேல் அவன் அடி சேர்ந்து உய்ம்மினோ***
***எண்ண வேண்டா நும்மது ஆதும் அவனன்றி மற்று இல்லையே"(9–1–10)***
உமது உடைமைப்பொருள் அவன் மட்டுமே ஆவான். எல்லாமே அவன் உடைமை ஆதலால் நம்மதா, அவனதா எனும் ஐயம் இன்றி அவனுக்கே அடிமையாய் உய்வு பெறுங்கள் என மோக்ஷத்திற்கான வழியைச்சொல்கிறார். "வேறு உபாயங்களைப்பற்றாமல் எம்பிரானைப் பற்றுவதே சிறந்த வழி என்று சுருக்கமாகக் கூறுகிறேன்" என ஆழ்வார் கூறியதாலே, மற்றவற்றைப்பற்றி சிந்திக்கவும் அவசியமில்லை. ***" மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம்***

*மாநிலத்து எவ்வுயிர்க்கும் சிற்று வேண்டா"* என்பது இதை தெரிவிக்கிறது.
***வீடைப்பண்ணி ஒரு பரிசே எதிர்வும் நிகர்வும் கழிவுமாய் ஓடித்திரியும் யோகிகளும் உளரும் இல்லை அல்லரே"(8-8-9)*** எனும் வார்த்தைகளால் அஞ்ஞானம் கழிதலையே மோக்ஷமாகக் கொள்ளவேணும் என தெரிகிறது.

***"உற்றேன் உகந்து பணி செய்து உனபாதம்***
***பெற்றேன் ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்"(10-8-10)*** எந்தையே உன் திருவடிகளை அடைந்து வாய்மொழித் தொண்டு செய்யம் பேறு பெற்றேன். இந்த அனுபவமே என்றும் வேண்டும் என பிரர்த்திக்கிறார்.

***ஈதே யான் உன்னை கொள்வது எஞ்ஞான்றும என்***
***மை தோய் சோதி மணிவண்ண! எந்தாய்!***
***எய்தா நின் கழல் யான் எய்த ஞானக்***
***கை தா காலக்கழிவு செய்யேலே"(2-9-2)*** எனும்போது நான் என்றைக்கும் உம்மை வேண்டுவது பெறுவதற்கு அரிய உம் திருவடிகளை நான் பெற, ஞானமாகிய கையைக் கொடு என வேண்டுகிறார்.

***(2-9-3) "ஐ ஆர் கண்டம் அடைக்கிலும் நின் கழல்***
***எய்யாது ஏத்த அருள் செய் எனக்கே"*** என்பது கடைசி காலத்திலும் "உமது திருவடியை அயராமல் துதிக்கும்படி அருள் செய்க" என வேண்டுகிறார்.

***"அறுக்கும் வினையாயின ஆகத்து அவனை***
***நிறுத்தும் மனத்து ஒன்றிய சிந்தையினார்க்கு"(9-8-1)*** எனும்போது எம்பெருமானை ஒருமையுடன் சிந்திக்கும் உறுதி உடையார்க்கு அவர்களது புண்ணிய பாவ வினைகளை போக்கி அருள்கிறான் என்பதே கருத்து.

***"கடிவார் தண் அம் துழாய்க் கண்ணன் விண்ணவர் பெருமான்***
***படிவானம் இறந்த பரமன் பவித்திரன் சீர்***
***செடி ஆர் நோய்கள் கெடப்படிந்து குடைந்து ஆடி***
***அடியேன் வாய் மடுத்துப் பருகிக் களித்தேனே"(2-3-9)***
நித்யசூரிகளின் தலைவனான எம்பெருமானின் திருமேனி ஒப்பற்றதும் தூய்மையானதும் ஆகும்.அவனது குணங்களில் ஈடுபட்டு பாடிக் கழித்ததால் தூறு மண்டிய நோய்கள் அழிந்தன. அடியேன் உய்வு பெற்றேன் என்கிறார் .

நாளும் மீளா அடிமைப் பணி செய்யப் புகுந்தேன்" என்றும்
"தொண்டே உனக்காய் ஒழிந்தேன் துரிசு இன்றி "என்றும்
"அருளாது ஒழிவாய் அருள் செய்து அடியேனைப்
பொருளாக்கி உன் பொன்னடிக்கீழ் புகவைப்பாய்
மருளே இன்றி உன்னை என் நெஞ்சத்து இருத்தும் ..."
என்றும் பலவாறாக கூறி, பிரிவின்றி அவனுக்கு அடிமை செய்யவே தான் பிறந்ததையும்,தனக்கு அஞ்ஞானத்தை போக்கி ஏற்றுக்கொள்ளும்படியும் பிரார்த்திக்கிறார்.

அவன் திருவடித் தாள்களில் பணிந்தபின் குறையேதும் இல்லை என்பதை

***"பாதம் நாளும் பணிய தணியும் பிணி***
***ஏதம் சாரா எனக்கேல் இனி என் குறை?"(9-10-9)*** என்றும்,
***"இல்லை அல்லல்,எனக்கேல் இனி என் குறை"(9-10-10)***என்றும் சொல்லி பிறப்புகளாகிய கர்மங்கள் நெருங்காதிருக்க அவன் தாள் பணியவேண்டும் என்பதை, ***" பாடு சாரா வினை பற்று அற வேண்டுவீர் ..............***
***பாடி ஆடிப் பணிமின் அவன் தாள்களே" (9-10-11)***என்றும் சொல்கிறார்.

## முடிவுரை

சேதனாசேதனங்களை தனது ஸரீரமாகக்கொண்டு, ஸகலவித கல்யாண குணங்களுடன் கூடிய ஸ்ரீய:பதியான நராயணனே ஸத்யம். அவனது திருவடிகளை அடைந்து அவனுக்கு "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி" என்றபடி ஸதாகாலமும் கைங்கர்யம் செய்யும் பாக்கியம் கிடைக்க வேண்டும் என வேண்டுவதே நாம் செய்ய வேண்டியது.சரணடைந்தவர்களை காத்து அஞ்ஞானத்தை போக்கி உய்யவைப்பது அவனது திருவுள்ளம்.

அநாதியானதும்,அபௌருஷேயமானதுமான நமது ஸ்ருதிகளின் ஸர்வசப்தவாச்யமாயிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைத் தவிர வேறு உபாயமில்லை.எல்லாமுமுமுக்ஷுக்களும்,அஷ்டாக்ஷரம்,த்வயம்,சரமஸ்லோகம் ஆகிய மூன்று ரஹஸ்யங்களை அனுசந்தித்தாலே அவனது அருள் கிடைத்து விடும். கர்ம, ஞான,பக்தி யோகங்களுக்கு இன்றைய கலி காலத்தில் அவசியமில்லை.

இப்படிப்பட்ட உயர்ந்த, நமது ஸித்தாந்தத்தின் கருத்துக்களை,தமிழ் மறையான திருவாய்மொழியில்அருளியுள்ளார்,மயர்வற மதிநலமருளப்பெற்ற நம்மாழ்வார்.விஸிஷ்டாத்வைதத்தை விளக்கும் அர்த்தபஞ்சகமென்னும் ஐந்து விஷயங்களும் ஒவ்வொரு முமுக்ஷுவும் அறியவேண்டியவை.இந்த ஞானம் உண்டாக அனைத்து ஸ்ரீ வைஷ்ணவர்களும் அவரவர் ஆசார்யரை ஆஸ்ரயித்து,நமது ஸித்தாந்தத்தையும், திருவாய்மொழியின் ஆழ்ந்த உள் கருத்துக்களையும் கேட்டறிந்து உய்யவேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

***<u>ஸ்ரீ விஷ்ணுவே அனைவர்க்கும் ஸர்வேஸ்வரனாயிருப்பது</u>***

विष्णु सर्वोत्तम श्रीपतिरखिलतनु नित्यमुक्तैकलभ्य:
भक्तिन्यासैकलभ्यो निखिलजगदुपादानहेतुर्निमित्तं ।
भेदस्सत्योपवर्ग निरवधिकसुखं किंकरा शंकराध्या
इ न्यंत्रैय्यन्तम सिध्दं यतिपति कथितं ताइधतां जैत्रभेरी॥
अंगी कुर्वन्त्वकलुषधियो नित्यं यात्म विद्य
आद्यो धर्मंस्प्रुशतु वसुधामाशिष: पार्वती ।
देव श्रीमान्निरवधिदयासिन्धुरस्मिन प्रवंधे
वक्ता श्रोता वचनविषय: प्रीयतां वासुदेव ॥

***ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.***



*ஸ்ரீ நாதமுனிகள் ஸ்ரீ ஆளவந்தார், காட்டு மன்னார் கோயில்*




ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ பெரும்பூதூர்

*"காண்டகு தோளண்ணல் தென்னத்தியூர் கழலிணைக்கீழ்ப்*
*பூண்டவன் பாளன் இராமநுஜனைப் பொருந்தினமே "*



ஸ்ரீ மணவாளமாமுனிகள், காஞ்சீபுரம்

பதிப்பு - ஜூன் 2009